# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
புரட்டாதி 27
ஷவ்வா பிறை 29
ஞாயிறு (9-10-1977)
நிறுவியது 1947
புத்தகம் 36
இதழ் 35
தொலைபேசி: 352
விலை சதம் 60


● அரசியலமைப்பு திருத்தங்களை கூட்டணி பகிஷ்கரித்தது

# “தமிழ் ஈழம் - தந்தை செல்வா தந்த அரசியல் தத்துவம்!”

## தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சி முதல்வர் விளக்கம்!

தமிழ் ஈழத் தேசிய இனத்தினுல் முற்ருக நிராகரிக்கப்பட்டுவிட்ட சிறீலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு, ஐ. தே. கட்சி அரசாங்கம் கொண்டுவந்திருந்த ஜனுதிபதி சம்பந்தப்பட்ட திருத்த விவாதங்களில் கலந்துகொள்ளாது தமிழ் ஈழப் பிரதிநிதிகள் அவற்றை முற்ருகப் பகிஷ்கரித்தனர்.

இந்த விவாதங்களில் கூட்டணி கலந்துகொள்ளாதது குறித்து எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் தேசிய அரசுப்பேரவையில் விடுத்த அறிக்கையில், அமரராகிவிட்ட மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் வகுத்துத்தந்து விட்டுச்சென்ற அரசியல்தத்துவமே ‘தமிழ் ஈழம்’ என்றும், அந்த இலட்சியத்தை முன்வைத்தே கடந்த தேர்தலில் தமிழ் மக்களின் ஆணையை கூட்டணி பெற்றுக்கொண்டதாகவும், தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியலமைப்பு ஒன்றுக்கு கொண்டுவரப்படும் திருத்தம் பற்றி கூட்டணி அக்கறை செலுத்த வேண்டியதில்லையென்றும் எடுத்துரைத்தார்.

அரசியலமைப்பு திருத்தம் சம்பந்தப்பட்ட விவாதங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணி பங்குபற்ருது என்ற செய்தியை 25-9-77 சுதந்திரனிலேயே நாம் வெளியிட்டிருந்தோம். சுதந்திரன் தெரிவித்திருந்த அரசியல் தீர்க்கதரிசனப்படியே கூட்டணியின் நடவடிக்கைக்குழு உறுப்பினர்களும் ஏகமனதாக மேற்படி விவாதங்களில் கூட்டணி பா. உ.க்கள் பங்குபற்றக் கூடாதென்று முடிவுசெய்தனர். அந்த முடிவின்படி, எதிர்க்கட்சிமுதல் வரும் தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தேசிய அரசுப் பேரவையில் 4-10-77ல் ஓர் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் திரு. அமிர்தலிங்கம் கூறியிருப்பதாவது:- கடந்த அரசாங்கம் தமிழ்மக்களுக்கு செய்த கொடுமைகள் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழுகின்ற தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் ஐக்கியதேசியக்கட்சிக்கே வாக்களித்தார்கள். ஐக்கிய தேசியக்கட்சியும் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கப்போவதாகவும், ஒவ்வொரு பிரஜைக்கும் இன மத சாதி பாகுபாடின்றி அடிப்படை மனித உரிமைகள் வழங்கப்படும் என்றும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தது.

ஆனல் தேர்தல் நடந்து ஒருமாதத்துக்குள் நடந்தது என்ன? தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்; அடித்து, உதைத்து முறிக்கப்பட்டார்கள்; தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், வீடுகளிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர்; தமிழர் கடைகள் எரிக்கப்பட்டன. உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. அவர்கள், தரை, கடல், விமான மார்க்கங்களின் வழியாக தமிழ் ஈழத்துக்கு தப்பியோடவேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

தமிழ் மக்கள் தங்கள் உயிரைக்காத்துக்கொள்ள உரிமையற்றவர்களாக உள்ள இந்த அவல நிலையில் ஜே. ஆர். பிரதமராக இருந்து ஆட்சிசெய்தால் என்ன? ஜனுதிபதியாக இருந்து ஆட்சிசெய்தால் என்ன எல்லாம் ஒன்றுதான். அதில் அவர்களுக்கு அக்கறையும் இருக்க முடியாது.

எங்கள் வீடு தீப்பற்றியெரியும் போது அங்கு யன்னலுக்கு போடப்பட்டுள்ள திரைச்சீலைபச்சையா அல்லது நீலமா என்பதைப் பற்றி பார்த்துக்கொண்டிருக்க எப்படிமுடியும்?

பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்த மசோதா தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை.

—8-ம் பக்கம் பார்க்க

# கலவரத்தின் பின்னணியில் கட்டாய நாடுகடத்தல்!

## புதுடெல்லியில் நிலவும் கருத்து

இலங்கை—இந்திய ஒப்பந்தங்களின் கீழ் எந்தவிதக் கட்டாய நாடுகடத்தலையும் இந்தியா ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதனுல்— இலங்கைக் குடியுரிமையைத் தேர்ந்தெடுத்துள்ள இந்திய வம்சாவளித் தமிழர்கள் தாமாகவே அதை நிராகரித்து விட்டு இந்திய பிரஜாவுரிமையை நாடச் செய்யும் திட்டமிட்ட சூழ்ச்சியுடன் தான்—அதாவது மறைமுகமான கட்டாய நாடுகடத்தலை ஊக்குவிக்கும் நோக்குடன்தான் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு எதிராக சிங்கள இனவெறித் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் கீழ், தாம்விரும்பிய நாட்டு குடியுரிமையை தேர்ந்தெடுக்கும்உரிமையை இரு அரசுகளும் ‘நாடற்ற’ மக்களிடமே விட்டிருந்தன. அப்படி விட்டிருந்த போதிலும்—இலங்கை அரசு இந்தியப்பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்போருக்கு அதிக சலுகைகள் காட்டப்படுமென மறைமுகமான தூண்டுதலில் ஈடுபட்டு வந்தது. ஆனுல் இத்தூண்டுதலில் சிக்காது, ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இலங்கைக் குடியுரிமைக்கும் நான்கு இலட்சம் பேரே இந்திய குடியுரிமைக்கும் விண்ணப்பித் திருந்தனர்.

இந்நிலையில் — இலங்கைக் குடியுரிமையையும்,இலங்கை குடியுரிமைக்கான விண்ணப்பங்களையும், மலையகத் தமிழ் மக்களைக் கொண்டு தாமாகவே நிராகரிக்கச் செய்து அவர்களை இந்தியக் குடியுரிமையைத் தழுவச் செய்து; இந்தியாவுக்கு தாமாகவே வெளியேறச் செய்யும் ஒரு நிர்ப்பந்த நிலையை உருவாக்கும் நோக்குடனேயேதோட்டப் பகுதிகளில் வன்முறை தூண்டி விடப்பட்டதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இலங்கையையே தாயகமாக ஏற்று, அங்கேயே வாழ விரும்பும் மலையக மக்களை பலாத்காரமாக அங்கிருந்து வெளியேற்றும் சதித்திட்டமே இனக்கலவரம்—இந்தப் பலாத்கார பயமுறுத்தலுக்குப் பணிந்து, மறைமுகமான அல்லது நேரடியான கட்டாய நாடுகடத்தல் எதையும் இந்தியா ஏற்றுக் கொள்ளாது; அங்கீகரிக்காது! என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் வாழ விரும்பும் மக்களுக்கு அங்கு பாதுகாப்புத் தர வேண்டியது இலங்கை அரசின் கடமை; அப்படி பாதுகாப்பு தராத பட்சத்தில், இந்தப் பிரச்சினையை இந்தியா ஐ. நா. சபையில் எழுப்ப வேண்டும் என்றும் புதுடெல்லியில் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.



தமிழ் ஈழத்தே[illegible]ன் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. கிருஷ்ணகுமாரன்
இ. திருமால்
உடுப்பிட்டி.

கே: தமிழ் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் இப்போது தற்காலிகமாக அச்சிடப்படும் சுதந்திரன் ஏட்டை, யாழ்ப்பாணத்திலேயே நிரந்தரமாக வெளியிடுவீர்களா?

ப: அந்த முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

கே: நமது கூட்டணி பா. உ.க்கள் இருவர் மந்திரி தேவநாயகத்தை சந்தித்துப் பேசியதாகவும் அப்போது தனிநாட்டுக் கோரிக்கையை தாம் மனதார வரவேற்கவில்லையென்று கூறியதாகவும் வீரகேசரியில் வெளிவந்த செய்தி உண்மையா?

ப: அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது—ஆனால் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தனிநாடு கோரிக்கைக்கு துரோகம் நினைப்பவர் எவராக இருந்தாலும் அவர்களை தமிழ் சமுதாயம் மன்னிக்கப் போவதில்லையென்பது மட்டும் தெரியும்.

ஃ

இராமலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: நீங்களும் கொழும்பு அகதிமுகாமில் இருந்தீர்களா?

ப: இருந்தேன், அகதிகளின் உடனடித் தேவைகளை கவனிப்பதிலும், அவர்களைப் பத்திரமாக தமிழ் ஈழத்துக்கு அனுப்புவதிலும் தங்களைப் பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யாமல் எத்தனையோபேர் இரவு பகலென்று பாராமல் ஒய்வு ஒழிச்சலின்றி அங்கு உழைத்ததையும் கண்டேன்; யாழ்ப்பாண தொகுதி மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் எதுவுமே செய்யாததுமட்டுமன்றி— செய்தவர்களுக்கும் தொல்லை ஏற்படுத்திக்கொண்டு அதேவேளையில் எல்லாம் தம்மால்தான் நடைபெற்றதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்ததையும் கண்டேன்; பத்திரிகைகள் உண்மையான தொண்டர்களுக்கு விளம்பரம் கொடுக்காவிட்டால் பரவாயில்லை; அவர்கள் அதை எதிர்பார்க்கவும் இல்லை—ஆனால் போலிகளை விளம்பரப்படுத்தாமலிருந்திருக்கலாமல்லவா?

கே: தமிழர்களுக்கு இன்றைய நிலையில் நீங்கள் கூறுவது என்ன?

ப: சாதி. மத, பிரதேச வேறுபாடுகளை குழிதோண்டிப் புதையுங்கள்; இருக்கின்றவற்றை எல்லோருக்கும் பங்கிடுங்கள்; பூதம் போல பூமியை கட்டிக் காத்து வைத்திருப்பவர்கள்! வாழ வழியின்றி சிங்கள நாட்டிலிருந்து விரட்டப்பட்டு ஓடிவரும் தமிழ் அகதிகளுககு அவற்றை பிரித்து பூதானமாக வழங்குங்கள்; நீங்களாக முன் வந்து விரிந்த மனத்துடன் சமுதாய உணர்வுடன் செயற்படாவிடின் சமுதாயப் புரட்சியொன்று நமது மத்தியில் உருவாகுவது தவிர்க்கமுடியாததாகி விடும்!

ஃ

சுப்பிரமணியம்,
கிளிநொச்சி,

கே: கிளிநொச்சிப் பகுதியில் தமிழ் அகதிகளுக்குபுனர் வாழ்வு அளிக்கும் முயற்சியிலீடுபட்டிருக்கும் சங்கைக்குரிய கத்தோலிக்க சகோதரிகளின் உள்ளத்தை புண்படுத்தும்வகையில் சிலர் "கதலிக் அக்ஷன்" என்று கூறிவருகிறார்கள். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: தமிழ் சமுதாயம் மதம் கடந்து ஒன்றுபட்டுள்ள நிலையில், மத வேறுபாட்டு முலாம்பூசி, உண்மையான சமுதாயப் பணியாற்றுவோரை தூற்றி தமிழினத்தைப்பிளவுபடுத்த முயல்வோர் யாராயிருந்தாலும் அவர்கள் இனத்துரோகிகள்—சமுதாய விரோதிகள் என்றே கூறுவேன்.

கே: நீங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?

ப: அன்பே என்னுடைய மதம்—அறிவே என்னுடைய கடவுள்?

கே: பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம். கூட்டணியிலிருந்து விலகி விடுவாரா?

ப: அவர் விலகவும் மாட்டார்— அவர் அப்படி விலகுவதற்கு இலட்சியப்பிடிப்புள்ள பட்டிருப்பு தொகுதி இளைஞர்கள் அவரை அனுமதிக்கப்போவதுமில்லை!

* *

பொன் இராமநாதன்
கோவிற்குளம்,
விடத்தல் தீவு

கே: தமிழர்களை ஏன் சிங்களவெறியர்கள் அடிக்கின்றார்கள்?

ப: அடிக்காவிட்டால் தமிழன் அடிமை மோகத்தில் வீழ்ந்து இன உணர்வை அறவே மறந்துவிடுவான் என்பதால்!

கே: ஒரு நாளில் இனக் கலவரத்தை அடக்கவேண்டிய அரசாங்கம் பலநாட்களாக அதை விட்டு வைத்ததேன்?

ப, ஜெயவர்த்தனவை ஏதோ நமது மாமனோ, மச்சானோ பாட்டனோ பூட்டனோ என்று கருதிவிட்டீர்கள் போலும்!

ஃ

செ. கருணாகரன்,
அல்லைப்பிட்டி,

கே: சிங்கள வெறியாட்டத்தின் உச்சக்கட்டத்தைக் கண்ட பின்னரும் இன்னும் 'தேசிய ஒருமைப்பாடு' பேசுவோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தலை பிசகியவன் தவிர வேறு எந்த ஒரு தமிழனும் இனியும் தேசியம் ஐக்கியம், ஒருமைப்பாடு, ஒத்துவாழுதல் என்ற வார்த்தைகளை உச்சரிக்கமாட்டான்!

ஃ

க. கனகசபாபதி,
பதுளை.

கே: எமது இனம் மானம், உயிர், பொருள் அனைத்தையும் இழந்து அகதிகளாக பல்லாயிரக்கணக்கில் இடம் பெயர்ந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் மந்திரிசபையில் உள்ள ஒரே ஒரு தமிழ் இன மந்திரி வெளிநாடு சென்றது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: வெளிநாட்டுக்கு ஏன் வந்தேன்—ஊரிலேயே இருந்திருக்கலாமே என்று தலையில் கைவைத்தபடி எண்ணுகிற அளவுக்கு கனடாவில் நமது தமிழ் ஈழ இளைஞர்கள் அவரைப் பிய்த்து எறிந்துவிட்டிருக்கிறார்களே!

செல்வி. ந. இந்திராணி,
அல்வாய் வடக்கு

கே: உடுப்பிட்டி பா. உ. இராசலிங்கம் அவர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: மிகச் சிறந்த கல்விமான்; மிகச் சிறந்த பண்பாளர்; அமைதிப்போக்கினர்; அடக்கமே வடிவானவர்; தமிழ்ஈழத்தின் வரலாற்றில் புதிய சரித்திரம் படைத்தவர்; தமிழ் ஈழ இலட்சியத்திலும் இயக்கத்திலும் உறுதியும் பிடிப்பும் கொண்டவர்.

இராமலிங்கம்,
சுன்னாகம்.

கே: யாரை இச்சமயத்தில் சமூகத்துரோகியென்று கூறுவீர்கள்?

ப: அகதிகளுக்கு வழங்கும் உதவிகளை ஏப்பம் விடுவோரை!

ஃ

கு. ஆ. சபா,
வாகரை.

கே: கிழக்கு மாகாண மக்கள் தமிழ்ஈழம் பெறுவதற்கு காட்டிய ஆதரவு போதாது என்கிறார்களே—இது சரியா?

ப: பொய்! கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பேசும் தொகுதிகள் முழுவதிலும் பொதுத்தேர்தலில் பதிவான வாக்குகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியே ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளது. இப்போது பொத்துவிலிலும் கூட்டணி ஜெயக்கொடி நாட்டியுள்ளது! இது தமிழ் ஈழத்துக்கு ஆதரவு இல்லையென்பதற்கு அடையாளமா?

ஃ

ஜி. யோகேஸ்வரன்.
பருத்தித்துறை.

கே: புதிய அரசாங்கத்தின் 'வட்டமேசை' எதைக் காட்டுகிறது?

ப: தமிழர்களுக்குப் பட்டை நாமம் சூட்டிப் படவிருப்பதை!

கே: மாவட்ட அமைச்சர் பதவிபற்றி நீங்கள் என்ன ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்களே!

ப: என்சிந்தனைமாவட்ட மந்திரி பதவியைப் பற்றியல்ல — தமிழீழத்தாயின் அடிமை விலங்கை அறுப்பது எப்படி என்பது பற்றியே சுற்றிசுற்றி ஓடுகிறது—அந்த மகோன்னத லட்சியத்தின் முன் மற்றதெல்லாம்எனக்கு வெறும் தூசுதான்.

## வாசலில் நெருப்பு மூளும்

— புதுவை இரத்தினதுரை —

இதுவரை எவர்க்கும் சாபம்
இட்டுநான் கவிதை பாடி
அதுசரி பிழையென் றேதும்
அறிந்தவ னல்லேன்; ஆனல்
மதுரையை ஆண்ட எந்தன்
மாத்தமிழ் தாயே! இன்று
இது சரியென்றே சாபம்
இடுகிறேன் உடனே காட்டு.

பெற்றயென் தாயின் கற்பு
பெரிதெனத் தெரிந்தால்..., என்னைப்
பற்றிய மனைவி கற்பு
பழுதில்லை யென்றால்..., வந்து
அற்புதம் விளைக, இங்கோர்
அனற்சுடர் எழுக; எம்மை
சுற்றிய பகைமை யாவும்
சுருண்டு வீழ்ந் திறக்கச் செய்க.

தங்கமே! தமிழே! எந்தன்
தாய்க்குல மரபே! உன்னைப்
பங்கமே செய்த அந்தப்
பாவியர் புழுத்துச் சாவார்
வங்கமா கடலே! பொங்கி
வந்திடு; கொடுமை செய்யும்
சிங்கள மிருகம் பெற்ற
சிறுக்கரை விழுங்கிக் கொள்ளு.

மானமே திரையாய்ப் போட்ட
மறத்தமிழ்ப் பெண்கள் கற்பை
ஈனமாய்ப் பறித்த வேடர்
ஈளையும், தொய்வும் வந்து
ஊனமே யுருகிக்; கைகால்
ஊசிபோல் மெலிந்து சாவார்.
வானமே இடிந்து அன்னார்
வாசலில் நெருப்பு மூட்டும்.

என்குலப் பெண்கள் தாலி
எத்தனை அறுந்து போச்சு.
என்குலப் பெண்கள் மஞ்சள்
எத்தனை அழிந்து போச்சு.
என்குலக் குங்கு மத்தை
எவனழித் திருந்த போதும்
அன்னவன் மனைவி; பிள்ளை
அனைவரும் அழிந்து போவார்.

பள்ளிகள் எரித்த கைகள்
பாரிச வாதம் காணும்.
முல்லை போல் மலர்ந்த சின்ன
முறுவலை அடித்த கைகள்
அள்ளிச் சோறுண்ணு வண்ணம்
அழுகியே போகும்; பெண்ணைத்
தள்ளியே உதைத்த கால்கள்
தரையிலே நடக்கா தாகும்.

பத்திரப் படுத்தி வைத்த
பணத்தினைக் கொள்ளை கொண்ட
அத்தனை பேரும்; அற்ப
ஆயுளில் முடிய முன்னர்
நித்திரை யின்றி, வாழ்வில்
நிம்மதி யேது மின்றிக்
கத்தியே; ரத்த வாந்தி
கக்கிய படியே சாவார்.

கற்றவர் தன்னைக் கூடக்
காலினுல் மிதித்துக் கொன்றோர்
சுற்றமே அழியும் வீட்டைச்
சுற்றியே கள்ளி; முள்ளிப்
பற்றைகள் வளரும்; நாக
பாம்புகள் பெருகிக் கொத்தும்.
புற்றுநோய் வந்து எங்கும்
பிணப்பறை எழுந்து கேட்கும்.

சிங்களக் கிணறு யாவும்
சீக்கிரம் ஊற்றடைக்கும்
மங்கள நாளிற் கூட
மரணமே நிகழும்; உண்ணப்
பொங்கிடும் சோற்றிற் கூடப்
புழுக்களே நெளியும்; பிள்ளை
தங்கிடா தவரின் பெண்கள்
தனிமல டாகிப் போவார்

முற்றிய வயல்கள் யாவும்
மூண்டெரி கொள்ளும்; சுற்றி
வற்றிடா தோடும் கங்கை
வற்றியே புழுதி கொள்ளும்.
மற்ற நாடிருந்து இங்கு
மாவரும் கப்பல் கூடப்
பற்றியே எரியும்; அன்னார்
பஞ்சமே வந்து சாவார்

அன்னையே! தமிழே! என்னை
ஆதரிக் கின்ற கையே!
சொன்னவை யாவு மிங்கு
சீக்கிரம் நிகழ வேண்டும்
வண்ணமை தீட்டும்; எங்கள்
வாசலிற் கோலம் போடும்
கன்னியர் கற்பின் மீது
காட்டிய ஆணை வெல்க;

அறத்தினும் காவல் போட்டு
அன்பினுல் வாழ்க்கையோட்டும்
மறத் தமிழ்க் கவிஞன் சாபம்
மாறிடா வண்ணம் வந்து
பிறத்தியார் நெஞ்சில்; எம்மைப்
பிணமெனச் சரித்தோர் நெஞ்சில்
திறத்தினைக் காட்டு; உந்தன்
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம், இது யூ.என்.பி. ஆட்சி!

அன்பு நண்பா

ஆகஸ்ட் பிற்பகுதியில் சிங்கள இனவெறிக்கு பலியாகிய தமிழன் கொட்டிய குருதியின் சூடு இன்னும் அடங்கிடவில்லை; ஆங்காங்கே சிங்களமிலேச்சர்களால் வெட்டியும் குத்தியும், எரியூட்டப்பட்டும், சுட்டுத் தள்ளப்பட்டும் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர் பிணங்களின் வெப்பம் இன்னும் ஆறிடவில்லை; மிருக வெறியர்களால் கற்பழிக்கப்பட்ட தமிழ்த் தங்கங்களின் பெருமூச்சும் பீதியும் இன்னும் ஓய்ந்திடவில்லை; தொழிலிழந்து, சொத்திழந்து, குடும்பத்தலைவர்களை இழந்து, ஏக்கம் நிறைந்த விழிகளுடன் தாயகம் திரும்பிய தமிழர் குடும்பங்களின் மறு வாழ்வுக்கு இன்னும் வழியேதும் திறக்கப்படவில்லை; நாட்டில் அச்சமின்றி நடமாடவேமுடியாத நிலையில் தமிழினம் தவிக்கிறது; எந்த நேரத்தில் ஏது நடக்குமோ என்கிற பீதி நிறைந்த நெஞ்சங்களுடன் நடமாடுகின்றனர் தமிழர்கள்; சிங்கள நாட்டின் வளத்துக்காக தமது இரத்தத்தையும் வியர்வையையும் நீராகப் பாய்ச்சி, உடலையே எருவாக இட்டு, ஓடாக உழைத்திட்ட மலையகத் தமிழர்கள், அங்கு வாழ வழியில்லாமல் விரட்டப்பட்டு, அகதி என்ற பெயரைத் தாங்கியபடி தமிழீழத்தாயகம் நோக்கி நாள் தோறும் வந்தபடி இருக்கிறார்கள்!

இந்நிலையில் தமிழினத்தின் சிந்தனையை திசைதிருப்புவதற்காக—சிங்கள இனவெறிக் கொடுமையினால் தமிழர் நெஞ்சில் ஏற்பட்டிருக்கும் புரட்சி எண்ணங்களை புறமுதுகிடச் செய்வதற்காக—"மாவட்ட மந்திரி" என்ற ஒன்றுக்கு குஞ்சம் கட்டி, அது கிடைத்தவுடன் தமிழர் பிரச்சினைகள் யாவும் தீர்ந்துவிடுமென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் அதை ஏற்றேயாக வேண்டுமென்றும் நாளேடுகள்—குறிப்பாக 'தினபதி'—திட்டமிட்ட ஒரு பிரசாரத்தை நாள்தோறும் நடாத்தி வருகிறது!

நண்பா; தமிழின விரோதப் போக்கை தூண்டிவிட்டு—கடந்த காலங்களில் எல்லாம் தமிழினத்துக்கு கிடைக்கவிருந்த உரிமைகளை கிடைக்காமற் செய்ததில் பெரும் பங்கு வகித்து வந்ததும்—சிங்கள இனவெறியின் பாசறையுமான 'குணசேன' நிறுவனத்தை சேர்ந்த 'தினபதி' தான் இப்போது தமிழ் சமுதாயத்துக்குப் புத்தி சொல்ல வந்திருக்கிறது, சாத்தான் வேதம் ஓதுகிறது!

தினபதியின் சகோதரப் பத்திரிகையான 'சன்' தமிழினப் பகையைத் தூண்டிவிடும் எப்.ஆர்.ஜெயசூரியாவின் நஞ்சுக்கட்டுரையை இனக்கலவரத்துக்கு இருநாட்கள் முன்னதாக பிரசுரித்திருந்ததை மறந்திருக்க மாட்டாய்! ஏன் தினபதியின் இலட்சணம் தான் தெரியாததா என்ன? பொதுத்தேர்தல் சமயத்திலும்—அதற்கு முன்பும்—தமிழினத்தின் ஒற்றுமையை கெடுத்திடவும், கூட்டணியைப் பிளந்திடவும், தமிழ் சமுதாயத்தை கிழக்கு வடக்கென்று பிரதேச அடிப்படையில் வேறுபடுத்திடவும் இந்தத் தினசதி செய்திட்ட சூழ்ச்சிகள்தாம் எத்தனை எத்தனை? இதே தமிழின விரோத ஏடுதான் "மாவட்ட மந்திரி" யென்ற சொல்லை வைத்துக் கொண்டு தமிழ் இனத்தை குட்டை குழப்புகிறது; தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன செய்ய வேண்டும் என்று இலவச 'ஆலோசனை' கூறுகிறது! தந்தை செல்வாவின் வழியென்ன என்பதைப் பற்றி எமக்கு சொல்கிறது!

நண்பா, 'மாவட்டமந்திரி' யென்ற மயக்கு மொழிகேட்டு நம்முடைய இயக்கத்திலுள்ளவர்களிலும், சிலர் அதிலே தம் சிந்தனையை செலுத்தி, அதை ஏற்றிடுவதினாலே நமது தாயகத்தை அபிவிருத்திசெய்திட வழிஏதும் பிறக்குமா? அதை ஏற்பதினாலே நமது இலட்சியத்துக்கும், இனத்துக்கும் நன்மை ஏற்படுமா? அல்லது பின் தள்ளப்படுவோமா என்று ஆராய்ச்சி செய்திடத்தலைப்பட்டிருக்கிறார்கள்!

இதை எண்ணிடும்போது நம் மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் அடிக்கடி கூறுகிற ஒரு பழமொழியே எனக்கு நினைவுக்கு வந்திடுகிறது; "கற்பூரம் கொழுத்துவதற்கு முன்னர் சன்னதம் கொள்ளக்கூடாது" என்று அவர் கூறுவார்!

ஆம், "மாவட்டமந்திரி"யாக நியமிக்கப்படும் ஒருவருடைய அதிகாரவரம்பு என்ன? அவர் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வெறும் 'றப்பர்ஸ்டாம்ப்' ஆகத்தான் பயன்படுத்தப்படுவாரா? அல்லது அந்தந்த மாவட்டங்களில் தன் சொந்த திட்டத்தின்படி அபிவிருத்திவேலைகளை திட்டமிடவும், செயற்படுத்தவும் அதிகாரம் கொண்டவராக இருப்பாரா? காணிப்பங்கீடு, நீர்ப்பாசனம் போன்ற துறைகள் மாவட்டமந்திரியின் பரிபூரண அதிகாரத்துக்குள் வருமா? அல்லது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் அந்தந்த மாவட்டங்களுக்கு அரசாங்கம் ஒதுக்குகின்ற பணத்தை பங்கீடு செய்வது மட்டும்தான் மாவட்டமந்திரியின் கடமையா? இவை போன்ற எத்தனையோ கேள்விகளுக்கு இன்னும் விடைகிடைத்தபாடில்லை.

இதுமட்டுமன்றி— தனிநாடு கோரி அதற்காகப் போராடுவதற்கு தமிழ் மக்களிடமிருந்து பூரண ஆணையேற்றிருக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு, மாவட்ட மந்திரிப் பொறுப்பை அளிக்கப் போவதாக பிரதமர் ஜே. ஆர். எந்தவிதமான அறிவிப்பையும் இதுவரை வெளியிடவும் இல்லை! இந்நிலையில் மாவட்ட மந்திரிபதவியென்ற மாயமானைப்பற்றி தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் அக்கறை செலுத்துவதும், அதுபற்றி விவாதித்து தமது நேரத்தையும் நினைப்பையும் பாழடிப்பதும் அர்த்தமற்றது என்பதே எனது கருத்தாகும்!

மாவட்டமந்திரி என்ற மாயமானைக் காட்டி— தமிழினத்தின் ஒற்றுமையை சிதைத்திடவோ--பிரதேசரீதியான பிளவுகளை ஏற்படுத்திடவோ— கூட்டணிக்குள் பிரதேச ரீதியான விரிசலை ஏற்படுத்தவோ— சிங்கள அரசாங்கத்துக்கு யாரும் ஒரு துளியும் சந்தர்ப்பமளித்துவிடக்கூடாது. தமிழ் தேசிய இனத்தை—தமிழ் ஈழத் தேசிய உணர்வை—மாவட்டரீதியாகக் கூறுபோடுவதற்கும், தமிழ் மாவட்டங்களுக்குள் பாரபட்சங்களையும் வேறுபாடுகளையும் ஏற்படுத்தி, தமிழினத்தின் ஒற்றுமையையும், இலட்சிய உறுதிப்பாட்டையும் சிதைத்திடவும் அரசு முயற்சிக்கலாம்— இதிலே நாம் ஒவ்வொருவரும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்திடவேண்டியது அவசியம்!

## அரசியல் மடல்

மாவட்ட மந்திரி பதவியை ஏற்கும்படி எதிர்க்கட்சியிலிருக்கும்கூட்டணி பா. உ.க்களை புதிய ஜனதிபதி அழைத்தால்—அப்போது அதுசம்பந்தமாகநடவடிக்கை குழுவைக்கூட்டி ஆலோசித்து நமது தலைவர்கள் திட்டவட்டமான முடிவை நாட்டுக்கு அறிவிப்பார்கள்!

தமிழ்பேசும் மக்கள் தங்கள் பிரதேசத்து நிர்வாகத்தை தாங்களே நிர்வகிப்பதற்கும், அதற்குத் தேவையான சட்டங்களை இயற்றிடவும் கூடிய 'சுயாட்சி' உரிமையை அங்கீகரித்து— அந்த அடிப்படையில் மாவட்ட மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டாலொழிய—அரசாங்கத்தின் வெறும் 'ரப்பர் ஸ்டாம்பு'களாக மாவட்ட மந்திரிகள் நியமிக்கப்படுவார்களானல் — அதனல் தமிழ் இனத்துக்கு துளிகூட பயன் கிடையாது என்பதே எனது கருத்தாகும்!

தாம் நினைத்தவரை மாவட்ட மந்திரியாக நியமிக்கவும், தாம் விரும்பாதபோது பதவி நீக்கம் செய்யவும் ஜனதிபதிக்கு பூரண உரிமையும் அதிகாரமும் இருக்கும் போது, மாவட்ட மந்திரி பதவியை ஏற்று நாம் நினைக்கின்ற அளவுக்கு தமிழினத்துக்கும், நாம்ஏற்றுக் கொண்டிருக்கும் மூலாதார இலட்சியத்துக்கும் எதுவித பெரிய நன்மையும் செய்துவிட முடியாதென்பதே என் சொந்தக்கருத்தாகும்!

1965ம் ஆண்டு நாம் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு கொடுத்து— மந்திரிசபையிலும் நம்முடைய அமரர் திருச்செல்வம் அவர்கள் உள்ளூராட்சிமந்திரியாகப் பதவி வகித்த வேளையில் நடைபெற்ற மறக்க முடியாத சம்பவத்தை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். தன்னுடைய அதிகாரவரம்புக்குட்பட்டு —திருக்கோணேசராலயத்தை புனித நகராக்குவதற்காக ஒரு குழுவை நியமித்திருந்தார் திருச்செல்வம்; என்ன நடந்தது? அமைச்சர் திருச்செல்வம் இக் குழுவை நியமித்ததை ஆட்சேபித்து அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயகாவிடம் தூதுவந்தார் சேருவில பௌத்த பிக்கு; இதுபற்றி சம்பிரதாயத்துக்குத்தானும் திருச்செல்வத்துடன் கலந்தாலோசிக்காமல் [illegible] மேலதிகாரத்தை பிரயோகித்து திருச்செல்வம் நியமித்த குழுவை கலைத்துவிட்டார் திரு. டட்லி சேனநாயகா. மானஸ்தரான திருச்செல்வம் உடனடியாக பதவியை தூக்கியெறிந்தார்!

தமிழரான ஒரு 'கபினெட்' மந்திரியின் உத்தரவுக்கே இந்தக்கதியென்றால்— அதுவும் நமது ஆதரவினால் அதிகாரத்துக்கு வந்த டட்லி சேனநாயகாவே இப்படி ஒரு புத்தபிக்குவைத் திருப்திப்படுத்த நடந்துகொண்டாரென்றால்— ஜனதிபதியினல் 'நியமிக்கப்படும்' மாவட்டமந்திரியினல் என்ன செய்ய முடியும்? நமது நோக்கங்களுக்கு ஏற்றவாறு எப்படித்தான் அதைப் பயன்படுத்த முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை!

நம்முடைய ஒரே நோக்கம்—நம்முடைய கொள்கை—நம்முடைய சிந்தனை—தனிநாடு அமைப்பது தான் என்பதும் அதைநோக்கியே நாம் எந்த வாய்ப்பையும் பயன் படுத்துவோம் என்பது அரசுக்குத் தெரியும்; மாவட்ட மந்திரியின் கடிவாளத்தையே தனது கையில் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் ஜனதிபதி—நாம் அந்தப் பதவியிலிருப்போமானல்—நமது எண்ணப்படி செயல்பட அனுமதிப்பார் என்று எதிர்பார்ப்பதும், மாவட்ட மந்திரி பதவியை நமது இலட்சியத்துக்காகப் பயன்படுத்துவதும் எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

நான் ஆரம்பத்தில் கூறியதுபோல—தமிழ் மக்கள் தமது பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆளுவதற்கு உரிமையுடையவர்கள் என்ற அடிப்படைத்தத்துவத்தைஅரசாங்கம் ஏற்றுக் கொண்டாலன்றி—மாவட்டமந்திரி பதவிகளால் தமிழ் சமுதாயத்துக்கு பெரிய நன்மை ஏதும் விளையப் போவதுமில்லை; இன்றைய அடிமை முத்திரை அழியப் போவதும் இல்லை!

யூ. என். பி எப்பொழுதெல்லாம் ஆட்சிபீடமேறுகிறதோ— அப்பொழுதெல்லாம் எமது விடுதலை இயக்கம் பின் தள்ளப்பட்டே வந்திருக்கிறது; யூ. என். பி. எப்பொழுது தமிழ் மக்களை அரவணைப்பதுபோல பாசாங்கு செய்கிறதோ—அப்போதெல்லாம் தமிழர் இயக்கங்களில் பிளவுகளும் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இது வரலாறு!

1948ல் தமிழ் காங்கிரஸ் டி. எஸ். சேனநாயகா அரசாங்கத்துடன் சேர்ந்ததால், இனவிடுதலைப்போராட்டம் பின்தள்ளப்பட்டதுடன்— தமிழ் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு, தமிழரசுக்கட்சி தோன்றியது! 1965ல் டட்லி சேனநாயகா அரசாங்கத்துக்கு, தமிழரசுக்கட்சி நிபந்தனையுடன் ஒப்பந்த அடிப்படையில் ஒத்துழைப்புக் கொடுத்து உரிமைகளை மீட்க முனைந்ததால்— இனவிடுதலைப் போராட்டம் பின்தள்ளப்பட்டதுடன், தமிழரசுக்கட்சிக்குள் பிளவும் ஏற்பட்டுதமிழர் சுயாட்சிக்கழகம் முளைவிட்டது!

ஆம்— யூ. என். பி— எப்பொழுது ஆட்சிக்கு வருகிறதோ அப்போது நாம் பலவீனப் படுத்தப்பட்டிருக்கிறோம்— இனவிடுதலைப் போராட்டம் பின்தள்ளப்பட்டு பலவீனப்பட்டு வந்திருக்கிறது— இது கடந்தகால வரலாறு; இதைமனதிற்கொண்டு சோக வரலாறுகள் இனியும் நிகழும் சந்தர்ப்பங்கள் ஏற்படாமல் கூட்டணித் தலைமை தீர்க்கதரிசனத்துடன் செயல்படும் என்று எதிர்பார்ப்போம்!

உங்கள் அன்பு தோழன்

கோவை-மகேசன்

---

## இலவசம்

"ஊற்று" என்ற சிறந்த பழைய சஞ்சிகைகளை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் பொதுமன்றங்களுக்கும், நூல் நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்க முன்வந்துள்ளார்கள். பெற்றுக்கொள்ள விரும்பும் மேற்படி நிலையங்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றார்கள்,

525/2, காங்கேசன்துறை வீதி,

த. பெ. இல. 77,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

### மலையகத் தமிழர்!

ஆகஸ்ட் பிற்பகுதியில் நடைபெற்ற பயங்கர சிங்கள இனவெறிக் கொடுமையின்போது, இத்தீவின் பொருளாதாரத்தை நிமிர்த்தித் தந்து கொண்டிருக்கும் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் படுமோசமான முறையில் துன்புறுத்தப்பட்டனர்; படுகொலை செய்யப்பட்டனர்; கற்பழிக்கப்பட்டனர்; அவர்களது 'லயன்'கள் கொளுத்தப் பட்டன; அவர்களது சிறுசேமிப்புக்கள் கூட கொள்ளையடிக்கப்பட்டன; பீதியும் அச்சமும். கூக்குரலும். அழுகுரலும் எதிரொலித்தன. இன்றைக்கும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த மக்களைப்பற்றி இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்குமிடையே இரண்டு ஒப்பந்தங்கள் இருந்தும் கூட, மலையக தமிழ் மக்கள் மீது சிங்கள இனவெறி திட்டமிட்டு ஏவிவிடப்பட்டது; வன்முறை தலைவிரித்தாடியது; இலங்கை அரசு இந்த வன்முறையை தடுத்திட உடனடியாக தகுந்த திருப்திகரமான நடவடிக்கை எடுக்கவில்லை; இந்திய அரசும் 'ஒரளவு அக்கறை' செலுத்தியதே தவிர தனது முழுக்கவனத்தையும் திருப்திதரக் கூடிய அளவுக்கு செலுத்தத் தவறிவிட்டது.

தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள இனவெறித்தாக்குதல் இப்போது திடீரென்று ஆரம்பமானதல்ல—பொதுத் தேர்தலுக்குமுன்பே டவன் தோட்டத்திலும் மற்றும் பல இடங்களிலும் தொடங்கி விட்டதை நாடு அறியும்!

சிங்கள இனவெறிக் கொடுமையினுல் பீதியின்றி நாட்டில் உயிர்வாழ முடியாத நிலையில்—இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களுக்கு கூட அதைத் துறந்துவிட்டு இந்தியாவுக்கு சென்றுவிட்டால் பரவாயில்லை; இங்கிருந்து ஏன் சிங்களவர்களால் வெட்டுப்பட்டு, அடிபட்டுச் சாகவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்ட அவல நிலை காரணமாக தலை தூக்கியுள்ளது.

இதை அவர்களில் சிலர் பகிரங்கமாகவே கூறுகிறுர்கள்; சிங்கள முதலாளிகளின் நாளேடுகள் 'மகிழ்ச்சி பொங்க' அதை வரவேற்று கொட்டை எழுத்துக்களில் அக்கருத்தை ஆதரித்து எழுதுகின்றன!

ஆம், எங்களுக்கு இலங்கைக் குடியுரிமையும் வேண்டாம்; நாங்கள் எல்லோரும் இந்த நாட்டை விட்டு இந்தியாவுக்கு போய்விடுகிறேம் என்று மலையகத் தமிழர்கள் கூறுகின்றபோது, சிங்கள தேசியவாதிகளுக்கு காதில் தேன் பாய்ந்ததுபோல இருக்கிறது; இங்குள்ள தமிழ் தேசிய வாதிகளுக்கோ காதில் தேள் கொட்டியது போல் அது இருக்கிறது!

மலையகத்தமிழர்களை இந்த நாட்டை விட்டு 'எப்படியும்' விரட்டிவிட வேண்டும் என்ற நமது நீண்டகால எண்ணம் இப்போது நிறைவேறுவது கண்டு சிங்களத் தேசியவாதிகள் பூரிப்படைந்து போய் நிற்கிறுர்கள்—'அடி' போல அண்ணன்தம்பி உதவார்கள் என்று எண்ணி மகிழ்ச்சிக்கடலில் மிதக்கிறுர்கள்; இன்னும் கொஞ்சம் வன்முறையை ஏவிவிட்டால் இவர்களை ஒரேயடியாகத் துரத்தி விடலாம் என்கிற விபரீத எண்ணம்—குஷி—அவர்களுக்கு ஏற்படுகிறது!

1948ம் ஆண்டு ஐ. தே. கட்சி அரசாங்கத்தினுல் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டு மலையகத் தமிழர்கள் அரசியல் அநாதைகளாக நாடற்றவர்களாக—ஆக்கப்பட்டதும்—கடைசி இந்தியன் வெளியேறும் மட்டும் கண்ணயரமாட்டேன் என்று காலஞ்சென்ற பண்டார நாயக்கர் சபதமெடுத்ததும்—கண்டிச் சிங்களவரின் காணி பூமியை மலைநாட்டுத் தமிழர்கள் 'ஆக்கிரமித்துக்' கொண்டிருப்பதாக பிரசாரம் செய்யப்பட்டு வந்ததும்—தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டபின் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டதும்—இந்த மண்ணிலிருந்து இந்த மண்ணைப் பொன்னுக்கிய மலையகத் தமிழர்களை நாட்டை விட்டு எப்படியும் ஒட்டி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தாம் விரும்பிய நாட்டுக் குடியுரிமையை தேர்ந்தெடுப்பதற்கு மலையகத்தமிழ் மக்களுக்கு இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின்கீழ் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டபோது, ஆறு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இலங்கை குடியுரிமை கோரி விண்ணப்பித்ததிலிருந்து அந்த மக்களின் சுயமான அபிலாஷையும், தேசபக்தியும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

எனவே இன்றைய நிலையில்— சிங்கள இனவெறியர்களின் காடைத்தனத்திற்கும், பயமுறுத்தலுக்கும் அஞ்சி, தாங்கள் தேர்ந்தெடுத்த நாட்டை விட்டு— தங்கள் உழைப்பினுல் உருவான நாட்டை விட்டு— ஓட நினைப்பது புத்திசாலித்தனமானதா என்பதை மலையகத் தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்!

இலங்கைக் குடியுரிமை பெற்ற— இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ள மலையகத்தமிழ் மக்களை இந்தியா ஏற்றுக் கொள்ளாது என்பது ஒரு புறமிருக்க— அப்படி இந்தியாவுக்கு செல்ல நினைப்பதும், அதை வெளியிலே கூறுவதும், [illegible] இனவெறியர்களுக்கு மேலும் உற்சாகத்தை மூட்டி, மலையகத் தமிழ் மக்களின் மீது தொடர்ந்து வன்முறையை பிரயோகித்தால், அவர்கள் அனைவரையும் நாட்டிலிருந்து சுலபமாக விரட்டிவிடலாம் என்ற பயங்கர எண்ணத்துக்கே பலம் சேர்க்கும்! இதை மலையகத்தமிழன் ஒவ்வொருவனும் உணர வேண்டும்!

எனவே இலங்கைக் குடியுரிமையை நிராகரித்து விட்டு இந்தியாவுக்கு செல்லும் நடைமுறை சாத்தியமற்ற அவசர ஆலோசனைகளை கைவிட்டு, இலங்கை குடியுரிமை பெற்றுள்ள மலையகத்தமிழர்களும், இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ளவர்களும் தீவின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில்— தமிழ் ஈழத்தில்— தங்கள் இருப்பிடத்தை— அச்சமற்ற வாழ்வை— அமைத்துக்கொள்ள முன்வரவேண்டும். அவர்களை தம்முடன் அணைத்துக்கொள்ள— அன்புடன் தம்மோடு இணைத்துக் கொள்ள— சகோதர தமிழ் ஈழத்தமிழர்கள் தயாராக இருக்கின்றுர்கள்!

மலையகத் தமிழர்களின் பாதுகாப்புக்கு இது ஒன்றே வழியாகும்!

# ஈழத் தமிழர்களின் உரிமைக் குரல்!

—முரசொலி மாறன்

தென்திசையைப்
பார்கிறேன்; என்சொல்வேன்;
என்றன்
சிந்தையெலாம்
தோள்களெல்லாம்
பூரிக்குதடா!

என்று தென்னிலங்கையைப் பற்றி அன்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினுர்.

அண்மையில் அங்கு நடைபெற்ற வன்முறைக் கலவரங்களைப் பற்றிக் கேள்விபடும்போது பூரிப்பு ஏற்படவில்லை; உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேச மனித உரிமைச் சங்கம் (International Human Rights Federation) ஈழததமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விளக்கி அந்நாட்டுப் பிரதமருக்கு நெஞ்சமுருகும் கடிதமொன்றை எழுதியிருக்கிறது.

டஜன்கணக்கில் சிறுபான்மையான தமிழர்கள் ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் நடைபெற்ற கலவரத்தால் படுகொலை செய்யப்பட்டதைக் குறிப்பிட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி அக்கடிதத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

தாக்குதலுக்குப் பலியானவர்களை சாலையோரங்களிலே உள்ள மரங்களில் தொங்கவிடப்பட்டார்கள். அவர்களது உடமைகள் சூறையாடப்பட்டன. அல்லது சுட்டெரிக்கப்பட்டன.

இத்தாக்குதலைத் தொடர்ந்து பத்தாயிரக்கணக்கில் தமிழர்கள் வெவ்வேறு பகுதிகளில் உள்ள முகாம்களுக்கு மாற்றப்பட்டார்கள். அந்த அகதிகள் முகாம்களில் வசிக்கும் நிலைமையையும் சுகாதார நிலைமையும் மிகவும் வருத்தமளிப்பதாக இருக்கிறது.

—இவ்வாறு பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

செப்டம்பர் மாதத் துவக்கத்தில் பாரீஸ் மேல் நீதிமன்ற வழக்கறிஞர் கிறிஸ்டியன் ராஸ்டோகர் அந்த தீவிற்குச் சென்றிருந்ததாகவும், 'சிங்கள மக்களின் மத்தியில் தமிழ்இன எதிர்ப்புணர்வு மிக ஆழமாகப் பதிந்திருப்பதை அவர் நேரில் கண்டதாகவும்'—அந்தக் கடிதம் மேற்கோள் காட்டியிருக்கிறது.

உயிரை எடுத்து அவர்கள் உடலை மரக்கிளைகளிலே தொங்கவிட வேண்டுமென்றுல் உள்ளத்திலே எவ்வளவு 'வன்மம்' இருக்கவேண்டும்?

இலங்கை வரலாறு இப்படி இரண்டு இனங்களின் மோதலைத்தான் திரும்பத் திரும்ப எடுத்துக்காட்டி வருகிறது.

---

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து தி. மு. க. முன்னணித் தலைவர்களில் ஒருவரும் முன்னுள் லோக்சபை உறுப்பினரும் 'முரசொலி' ஏட்டின் ஆசிரியருமான திரு. மாறன் எம். ஏ. அவர்கள் தமது முரசொலியில் தொடர்கட்டுரையொன்றை 'ஈழத்தமிழரின் உரிமை முழக்கம்' எனும் தலைப்பில் எழுதி வருகிறுர். அக்கட்டுரைத் தொடரின் முதலாவது பகுதி இங்கு இடம் பெறுகிறது. ஏனைய பகுதிகள் பின்பு இடம் பெறும்.

—ஆர்

---

19— ஆண்டுகளுக்குமுன்பு—1958, மே மாதம்— இப்படித்தான் இனக்கலவரங்கள் தோன்றி நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தார்கள். சுமார் 12 ஆயிரம்பேர் வீடிழந்தார்கள். அந்த அளவு எண்ணிக்கையினர் யாழ்ப்பாணத்திற்கு அகதிகளாக கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டனர்

ஆனுல் அப்போது இருந்த காரணங்கள் வேறு,

அன்றைய பிரதமரான திரு. சலமன் பண்டாரநாயக்கா புத்தச் சாமியார்களின் வற்புறுத்தலுக்கு ஆளாகி மொழிக் கொள்கை குறித்து தமிழர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்க விட்டார்.

அதன் காரணமாக தமிழர்கள் அறப்போரில்(சத்தியாக்கிரகம்) ஈடுபட்டனர்; இதைத் தொடர்ந்து அப்போது வன்முறை எழுந்தது.

ஆனுல் இப்போது திரு. ஜெயவர்த்தன பிரதமராக இருக்கிறுர். பிரச்சினைகளைத் தீர்க்க சர்வகட்சி மாநாடு கூட்டுவதாக உறுதியளித்திருக்கிறுர். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தபடி உண்மையைக் கண்டறிய ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கவும் சம்மதித்துள்ளார். எனவே நிலைமை சிறிது நம்பிக்கை தருவதாக இருக்கிறது,

ஆனுல் இலங்கைப் பிரச்சினை இரு தேசிய இனங்களின் பிரச்சினை. அந்த வரலாற்றுப் பின்னணியைப் பார்த்தால்தான் அந்த இரு இனங்களின் மோதல் எப்படி ஏற்பட்டது? எப்படித் தீவிரமானது? எப்படி இதற்குத் தீர்வு காண முடியும்?—என்கிற கேள்விகளைச் சந்திக்க முடியும்.

புராதனத் தொன்மை வாய்ந்தவை இராமாயணத்தில் வரும்செய்திகள். வால்மீகி இராமாயணம்இயற்றப்பட்ட காலம் கி. மு. 6-ஆம் நூற்ருண்டு என்று கருதப்படுகிறது. அப்போது இலங்கையை ஆண்டதாகக் குறிப்பிடப்படும் இராவணன் யார் என்பது தெரியும். 'என் தமிழர் மூதாதை!. என்கிறுர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

இலங்கையின் தொன்மையான நூல் 'மகா வம்சம்' அதில் இலங்கையின் 'முதல்' குடியேற்றம் பற்றிச் சொல்லப்படுகிறது.

வங்கத்தைச் சேர்ந்த இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானுல் கங்கை நதி தீரத்துக் கலிங்கத்தைச் சேர்ந்த — விஜயன் எனும் இளவரசன் 700 பேரோடு இலங்கையில் குடியேறினுனும்.

அங்கிருந்த 'யக்ஷர்'களை முறியடித்தானும்.

அதனுல் பாண்டிய மன்னனின் மகளைக் கேட்டுத் தூதனுப்ப, அவனும் சம்மதித்துத் தனது மகளோடு, பெரிய குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமான இளம் பெண்களையும், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களையும் அனுப்பி வைத்தானும். அவர்கள் அனைவரும் இராமேஸ்வரம் வழியாக இலங்கையை அடைந்தனர்.!

—புத்த புராணமே இப்படித் தமிழர்களோடு நல்லுறவோடுதான் துவங்குகிறது!

ஆனுல் விஜயனை வரவேற்றவர்கள்— அதற்குமுன்பே அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்கள்— திராவிடர்கள் என்கின்றனர், ஈழத்தமிழர்!

அதற்குப் பிறகு தமிழர்கள் மாறி மாறி ஆட்சியைக்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன் வளர்ச்சிக்கு நீங்களும் உதவலாம்!

தமிழ் தேசிய இனத்தின் ஒரேயொரு விடுதலைக் குரலான சுதந்திரன் தமிழ் ஈழத்திலிருந்து வெளி வரவேண்டும் என்பது சுதந்திரன் வாசகர்களின் நீண்டகால ஆசையாகும்.

ஆகஸ்ட் பிற்பகுதியில் சிங்கள சிறீலங்காவில் நடைபெற்ற தமிழினப் படுகொலையை அடுத்து 4-9-77 முதல் உங்கள் சுதந்திரன் ஏடு தமிழ் ஈழத் தின் தலைநகர்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலி ருந்து வெளிவருவதை அறிவீர்கள். இது தற்காலிக ஏற்பாடாக இன்றி நிரந்தர ஏற்பாடாக மாறவேண் டும் என்பதே தமிழ் நெஞ்சங்களின் இதய ஆசை யாகும்.

சுதந்திரனை யாழ்ப்பாணத்திலிருந்தே நிரந்தர மாக வெளியிடச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு கள் இப்போது நடைபெற்றுவருகின்றன. இத்துறை யில் சுதந்திரன் வாசகர்களும் தமிழ் பேசும் மக்க ளும் எமக்குக் கைகொடுக்க வேண்டியது அவசியமா கும். இதற்கு ஒரு திட்டத்தை வகுத்துள்ளோம். தமிழ் ஈழத்தில் ஒரு தொகுதிக்கு குறைந்தது 100 பேரையாவது சுதந்திரனுக்கு சந்தாதாரராகசேர்த் துக்கொள்வதே நமது திட்டமாகும்; சுதந்திரன் ஓராண்டுச் சந்தா ரூபா ஐம்பதுமட்டுமே. ரூபா ஐம்பது செலுத்தி சந்தாதாரராக உங்களைப்பதிவு செய்து கொள்வதன் மூலம் சுதந்திரன் தமிழ் ஈழத் தில் நிலைபெற்று வளரவும், அதே சமயம் சுதந்திரன் இதழ் வாரம் இருமுறை உங்களைத்தேடி உங்கள் வீட்டுக்கு வரவும் வழி செய்தவர்களாவீர்கள்!

சுதந்திரன்— சந்தா சேகரிப்பு திட்டத்திற்கு உதவக்கூடிய — உதவ விரும்பும் அன்பர்களை தயவு செய்து உடனடியாக எம்முடன் தொடர்பு கொள் ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்
சுதந்திரன்
238, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

## ஈழத்தமிழர் ..

—4-ம் பக்கத்தொடர்

கைப்பற்றியதை 'மகாவம்சம்' குறிப்பிடுகிறது.

கி. மு. 2-ஆம் நூற்றுண்டில் 'ஈலரா' என்னும் சோழ நாட்டைச் சேர்ந்தவன் (தமிழில் இவனை 'ஏலேலசிங்கம்' என்று அழைப்பார்) இலங்கைக்கு வந்து அங்கு ஆட்சியிலிருந்தவர்களை வீழ்த்தி 44 ஆண்டுகள் 'நீதி நெறி முறை பிறழாமல் எதிரியையும் சமமாக நினைத்து' ஆண்டதாகக் கூறப்படுகிறது.

கரிகாற்சோழன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்று 12-000—பேரைக் கைதிகளாகக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் காவிரிக்குக் கரை அமைத்த செய்தியும் கூறப்பட்டிருக்கிறது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை வடித்துப் பத்தினி வழிபாடு செய்தபோது அந்த விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒருவன் இலங்கை மன்னன் கயவாகு. (காலம்: கி. பி. 2-ஆம் நூற்றுண்டு.)

கி. பி. பத்தாம் நூற்றுண்டில் தனது 29-ஆவது வயதில் இராஜராஜ சோழன் ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்று சிங்களவரை முறியடித்திருக்கிருன்.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இராஜராஜன் ஈழத்தின் வடக்குப்பகுதி முழுவதையும் சோழப் பேரரசின் ஒரு மாநிலமாக்கினுன். சோழ நாட்டில் ஈழம் ஒரு மாநிலமாக அடங்கியது. அதற்கு 'மும்முடிச் சோழ மண்டலம்' என்பது பெயர். (மண்டலம் என்ருல் மாகாணம். மும்முடிச் சோழன் என்பது இராஜராஜனின் பட்டப் பெயர்.)

இராஜராஜனின் படையினர் ஆயிரம் ஆண்டுகளாக இலங்லகயின் தலைநகராக இருந்த அநுராதபுரத்தை அழித்தனர். சோழர்கள் காலத்தில் பொலன்நறுவா ஈழத்தின் தலைநகராயிற்று; அங்கே ராஜராஜன் ஒரு சிவன் கோயிலையும் அமைத்தான்.

—இலங்கையில் உள்ள மிகச்சில இந்து நினைவுச் சின்னங்களில் இதுவும் ஒன்று. அக்கோயில் தஞ்சைக்கோயிலோடு சிற்ப வடிவில் ஒத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

12 ஆண்டுகளுக்குப் பிறகு இராஜராஜ சோழனின் மகன் ராஜேந்திர சோழன் மீண்டும் இலங்கையின் மீது மோதி மீதமுள்ள இலங்கைப் பகுதி முழுமையையும்சோழ நாட்டின் ஆளுகைக்கு உட்படுத்தினுன்.

(வெள்ளையர் காலத்தில் ஒரு சமயம் இலங்கை தஞ்சாவூர் கலெக்டரால் நிர்வாகம் செய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. அது போலவே "இராஜராஜ சோழன்" திரைப்படம் தமிழ் நாட்டில் அவ்வளவாக வெற்றியடையவில்லை என்றுலும் இலங்கையில் இதுவரை அங்கு அதிகவசூலான படங்களில் ஒன்ருக ஓடியதும் நினைவு கூரத்தக்கது.)

—இவை இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இருந்த தொடர்பு பற்றியவை!

இலங்கையில் மிகத்தொன்மையான சிங்கள அரசுக்கள் கி. மு. இரண்டாயிரம் நூற்றுண்டிலிருந்து துவங்குகின்றன.

ஆனுல் தமிழர் வரலாறும் சிங்களவர் வரலாற்றைப் போலவேதொன்மையானது

கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் சிங்களவர் தலைநகரான அநுராதபுரத்தில் தமிழர்கள் வாழ்ந்ததை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

அங்கே சிங்களமன்னர்கள் தங்களுக்குள்ளாகவே போரிட்டிருக்கின்றனர். அது போலவே தமிழர்களும் சிங்கள அரசைக் கைப்பற்றி அவர்களைக் கப்பம் கட்ட வைத்திருக்கின்றனர்.

12 ஆவது நூற்றுண்டில் சிங்கள அரசர்கள் பொலன் நறுவாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். தமிழர்கள் ஆட்சி வடக்கு இலங்கையில் நடைபெற்றது.

1505-ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர்கள் இலங்கைக்குள் நுழைந்தபோது மத்தியப் பகுதியிலும், தெற்குப்பகுதியிலும் சிங்களவர் ஆட்சியும், வடக்குப் பகுதியில் தமிழர் ஆட்சியும் தனித்தனியாக நடைபெற்றுவந்தன.

தமிழர் பகுதிகளை வென்ற போர்ச்சுகீசியர் அப்பகுதியை தமிழர் (தேசவளமை) சட்டப்படியே நிர்வகித்து வந்தனர்.

150 ஆண்டுகளுக்குப்பிறகு டச்சுக்காரர்கள் அப்பகுதியைக் கைப்பற்றினர். அவர்களது ஆட்சி இன்னெரு 150 ஆண்டு காலம் நடைபெற்றது.

பிரிட்டீஷார் அந்தக் கடற்கரைப் பகுதிகளை 1796லும், தென்னகப் பரம்பரையொன்றினுல் ஆளப்பட்ட கண்டி அரசை 1815லும் கைப்பற்றினர்.

—நவீன காலத்தில் இலங்கைத் தீவு முழுவதும் ஒரு அரசின்கீழ் வந்தது இது தான் முதல் தடவை!

அதனுல்தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி துணைத்தலைவர் திரு. சிவசிதம்பரம் அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசும் போது.

"சிங்களவர்கள் தமிழர்களை என்றுமே வென்றதில்லை. எங்களை ஆட்சி செய்யுங்கள்— என்று என்றைக்குமே தமிழர்கள் சிங்களவர்களுக்குச் சம்மதம் கொடுத்ததில்லை... எனவே தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு சிங்களவர்களுக்கு சட்டப்படியான உரிமையோ அல்லது தார்மீக அடிப்படையிலான உரிமையோ கிடையாது" என்று முழக்கமிட்டார்.

டச்சுக்காரர்கள் முதலில் காப்பி பயிரிடுவதை அறிமுகப்படுத்தினர். பிரிட்டீஷார் அதைத் தீவிரப்படுத்தி (சிங்களவர் வாசம் செய்யாத) மத்தியப் பகுதியில் தேயிலைப் பயிரிடுவதைத் துவக்கினர். ரப்பரும் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரிட்டீஷ் தோட்ட முதலாளிகளுக்கு மிகக் குறைந்த விலையில் தோட்டங்கள் ஒப்படைக்கப்பட்டன.

எனவே அண்மையிலுள்ள தென்னிந்தியாவிலிருந்து ஏராளமான தமிழர்கள் கூலிகளாக இறக்குமதிசெய்யப் பட்டனர்.

பிரிட்டீஷார் இரு நாடுகளிலும் கடைப்பிடித்த கொள்கை, நிலைமையை மேலும் மோசமாக்கிற்று.

வேலை வாய்ப்பு தேடி இங்கிருந்து தமிழர்கள், 'கள்ளத் தோணி' மூலம் குடியேறினர்.

—இவர்கள் 'கள்ளத் தோணி' என்று சிங்களவரால் மட்டுமல்ல; ஈழத் தமிழராலும் கேலி பேசப் படும் நிலை எழுந்தது!

(1975-ஆண்டில் இலங்கை அரசு தோட்டங்களைத் தேச உடமையாக்கியபோதும்' தோட்டத் தொழிலாளர் நிலை வெள்ளையர் காலத்தில் இருந்ததைப் போலவே இன்னும் மோசமாகஇருந்து வருவது குறிப்பிடத்தக்கது.)

பிரிட்டீஷார் ஆட்சியில் இந்தியாவிலிருந்து குடியேறிய இந்தியத் தமிழருக்கும் குடியுரிமை (Citizenship) இருந்தது. அவர்களது பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர்.

ஆனுல் இலங்கை விடுதலை பெற்ற பிறகு நிலைமை மாறியது. திரு. சேனநாயகா பிரதமரானதும் அவர்களது குடியுரிமையை ரத்து செய்தார்.

மத்தியப் பகுதியில் இந்தியத் தொழிலாளிகள் அதிக அளவில் தங்கள் பிரதிநிதிகளைப் பாராளுமன்றம் அனுப்பி வைப்பதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

குடியுரிமையை இழந்ததால் அவர்களுக்குச் சொந்தமாக நிலம் வைத்திருக்கும் உரிமையும் போயிற்று. தோட்டங்களிலே நடைபெறும் பள்ளிகள் இலங்கைக் கல்வி இலாக்காவின் தொடர்பில்லாதவை. போதிய சுகாதார வசதியும் இல்லாமல் அவர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்கள் இலங்கைக் குடியுரிமை பெற்றிராதவர் மட்டுமல்ல; 'நாடற்றவர்' (Stateless) என்கின்ற புதிய பட்டத்தையும் பெற்றனர்.


இந்திய-இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி அவர்களில் சிலருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கைக் குடியுரிமை கொடுக்கப்பட்டாலும், அந்தக் குடியுரிமை சிங்களவர் ஈழத்தமிழர் போன்ற பூர்வீகக் குடிகள் அனுபவிக்கும் குடியுரிமைக்குச் சமமானதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

## கட்டுரையாளர்

'அகதிகள் கூறும் கண்ணீர்க்கதைகள்' என்ற பகுதியில் 2-10-77 சுதந்திரனில் 'குண்டசாலைப் படிப்புக்கு ஒரு கும்பிடு' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையை எழுதியவர் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த மு. கந்தசாமி என்ற பாதிக்கப்பட்ட விவசாயக் கல்லூரி மாணவராவர். அவரது பெயர் அக்கட்டுரையில் தவறுதலாக விடுபட்டுப் போனதற்கு வருந்துகிறோம்.

## பிறந்ததின வாழ்த்து

'அண்ணு' தாத்தாவும்
'செல்வா' பாட்டாவும்
காட்டிய வழியே எம் வழி!



செல்வி வாசுகி

நயினுதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் அன்னசோதி தம்பதிகளின் செல்வப்புதல்வி வாசுகி தனது மூன்ருவதுபிறந்த தினத்தை 6-10-77 வியாழக் கிழமை மிகவும் குதூகலமாகக் கொண்டாடினுர். இவர் சகல செல்வமும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்க என்று அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், நழாகினி தங்கச்சி மற்றும் உறவினர்கள் வாழ்த்துகிருர்கள்.


## மில்க்வைற் செய்தி — இதழ் 22

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:
மில்க்வைற் சவர்க்காரம் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை அரசினர் கட்டிடப்பகுதியைச் சேர்ந்த செ, கந்தசாமி தரும் தகவல் வருமாறு:-

கந்தளாயை அடுத்துள்ள குடியேற்றத் திட்டத்தில் நடைபெற்ற நெஞ்சுபதைக்கும் உண்மைச்சம்பவம்இது. 22.8.77 இரவு 8 மணியளவில் உணவை அருந்திவிட்டு கந்தசாமி என்பவர் தனது வீட்டு மாமரத்தின் கீழ் உறங்கிவிட்டார். அங்கு அவரது சிறிய தகப்பன்(வடிவேல்) சிறிய தாயார், அவர்களது மகள், மகன் (ஏழு வயதுப் பாலகன் ராசன்) ஆகியோரும், மற்றும் பாலா என்பவரும் அவரது அண்ணனும் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் தெருவில் பெரிய ஆரவாரம் கேட்டது. அந்த சத்தத்தில் அப்போதுதான் அயர்ந்துபோன அத்தனை பேரும் எழுந்துவிட்டனர். கந்தசாமி மட்டும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். சிறிய தாயார் மகளைக் கூட்டிக்கொண்டு முதலில் அங்கிருந்து ஓடிவிட்டாள். மறுவிநாடி 25 சிங்களக் காடையர்கள் மளமளவென்று வீட்டுக்குள் புகுந்தனர். அப்போது அங்கிருந்து ஓட முயற்சித்துக் கொண்டிருந்த சிறிய தகப்பனையும் ஏழு வயதுப்பாலகனையும் பிடித்துக் கொண்டனர். எப்படியோ அங்கிருந்த பாலா என்பவர் ஓடித் தப்பிவிட்டார்; அவரது அண்ணனோ மாமரத்தில் ஏறி மறைந்துகொண்டார்.

திடீரென துப்பாக்கி வெடிச்சத்தம்; மாமரத்தின் கீழ் உறங்கிக் கொண்டிருந்த கந்தசாமி என்பவரின் கணக்கு முடிந்தது. அடுத்து சின்னஞ்சிறு பாலகனை இரண்டுபேர் பிடித்து இருக்கிறார்கள். வேறுசிலர் சிறிய தகப்பனின் (இவரது பெயர் வடிவேல்) உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கினர். பின் அவரது உடலின் பல பகுதிகளை துண்டுதுண்டாக வெட்டினர். ஐயோ என்னை ஒன்றும் செய்யாதீர்கள்— நான் உங்களுக்கு ஒன்றும் செய்யவில்லையே — நான் குடும்பகாரன் என்னை விட்டு விடுங்கள்'' என்று கதறினார் வடிவேலு "அடோ பறதெமலா, உனக்குத் தனிநாடா? இதோ வாங்கிக்கொள்;'' என்று வடிவேலுவைநோக்கி வெடிவைத்தனர். துடித்து வீழ்ந்தார் அவர். ஏழு வயது சின்னஞ்சிறு குழந்தையோ— "சிங்களவர் அடிக்கிறார்கள் நாங்கள் ஓடுவம் வாங்கய்யா'' என்று கத்தியபோது அரக்கர்களான அக்காடையர்கள், "அடே எங்கேடா ஓடபோறது? இந்தா பறத்தெமிலா'' என்று கூறிக்கொண்டே அச்சிறுபாலகனின் வயிற்றில் வாளால்குத்தினார்கள்; வாள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு மறுபக்கத்தினால் வெளிவந்தது. உடனே அதிலும் மனநிறைவு பெறாத கொடியவர்கள், வாளினால் கழுத்தைத் துண்டாக்கினர். பின்னர் வீட்டுக்குத் தீவைத்து விட்டு, எரிகின்றதீக்குள் அச்சிறுவனை தூக்கி வீசினர். அவன் துடிதுடித்து கருகி செத்தான். உயிருடன் இருந்த வடிவேலுக்கு மீண்டும் ஒரு குண்டு பாய்ந்தது அவர் பிணமானார். இவ்வளவையும் மாமரத்தில் இருந்தபடி பாலாவின் சகோதரர் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவரால் வேறு என்னதான் செய்ய முடியும்? இத்தனையும் ஊரடங்குச் சட்டவேளையில்தான் நடந்தது. மறு நாள் அங்கிருந்து ஓடிச்சென்ற சிறியதாயாரும் அவரது பெண்ணும் பாலாவும் வந்துபார்த்தபோது பிரேதங்களைக் கூட அங்குகாண முடியவில்லை— திருகோணமலை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டனர். இக் கொடுமைகளைச் செய்தவர்கள் நன்கு அறிமுகமான சிங்களக் காடையர்கள்; இவர்களைப் பற்றி பொலீசில் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை!!!

●

பன்குளத்தைச் சேர்ந்த வி. இராசரெத்தினம் கூறுகிறார்:—

"எங்களுடைய பகுதியில் இருந்த மூன்று கடைகளும், பதின்மூன்று வீடுகளும் ஒரே நாளில் எரிக்கப்பட்டன. அன்றுதான் எங்கள் பகுதியில் கலவரம் மோசமான நிலையை அடைந்தது. எரிக்கப்பட்ட கடைகள் யாவும் தமிழர்களுடையதே. இந்த மூன்று கடைகளும் இங்கு ரோந்து சுற்றிவந்த படைகளின் தாக்கத்துக்கு உட்பட்டது என்றே நம்பப்படுகிறது. இப்படி வீதியோரங்களில் இருந்த வீடுகளும், கடைகளும், தாக்கத்துக்கு உள்ளாவதைக் கண்டதும் ஊரின் மத்தியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அனைவரும் (ஆண்கள் தவிர பெண்கள், பிள்ளைகள் ஆகியோர்) காட்டைநோக்கி ஓடிவிட்டனர் இந்தச் சந்தர்ப்பத்தில் ம. மல்லிகா எனும் ஒரு யுவதியும், சின்னத்தம்பி குணம் அல்லது ஞானம் என்றழைக்கப்படும் இளைஞன் ஒருவனும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள். இளைஞன் இறந்துவிட்டான் என பின்னர் தெரிய வந்தது.''

★

பன்குளத்தைச் சேர்ந்த வ. தெய்வநாயகம் எனும் தாய் கூறும் பயங்கர அனுபவத்தைக் கேளுங்கள்:-

"எங்கள் பகுதிக் கடைகளும், பிரதான வீதியில் இருந்த வீடுகளும் எரிக்கப்படுவதை அறிந்த நாங்கள் ஆண்களும், இளைஞர்களும் வீட்டில் நிற்க பெண்களும், பிள்ளைகளுமாக காட்டை நோக்கி ஓடினோம். பயத்தின் காரணமாக காட்டினுள் நாங்கள் நெடுந்தூரம் ஓடி விட்டோம். எங்கள் எதிரே தோன்றிய காட்டுமிருகங்களைக் கண்டதும்தான் நாங்கள் வெகுதூரம் வந்து விட்டதை அறிந்தோம். அப்போது அங்கிருந்த காட்டு விலங்குகள் எங்கள் அவல நிலையைக் கண்டு விலகிச் செல்வன போன்று அவ்விடம் விட்டு அகன்றன. பின்னர் நாங்கள் அந்த இடத்திலே தங்குவதற்கு முடிவு செய்து அவ்விடத்தில் இருந்தோம். சற்று நேரத்தில் இருள் சூழத் தொடங்கியது. அந்த இருள் எங்களை பொறுத்தவரையில் பயங்கரத்தை உண்டு பண்ணவில்லை என்றாலும், குழந்தைகள் அழத்தொடங்கிவிட்டனர். இந்தச் சமயத்தில் நாங்கள் இரண்டு முக்கிய விஷயங்களைக் கவனிக்க வேண்டி இருந்தது ஒன்று பிள்ளைகளின் அழுகைச் சத்தம் கேட்டு சிங்கள மிலேச்சர்கள் அங்கு வந்திடுவார்களோ என்று எண்ணி பிள்ளைகளின் அழுகையை நிறுத்துவதற்கு, வெளிச்சம் உண்டாக்கலாம் என்றால் அந்த வெளிச்சத்தை உருவாக்குவதெனின் காட்டு விறகுகளைக் கொழுத்தித்தான் ஒளி ஏற்படுத்த வேண்டும் அப்படிச் செய்யும்போது அந்த ஒளியே எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்ற இரண்டாவது பயங்கரமும் எம்மை ஒன்றாகத் தாக்கவே, பிள்ளைகளின் முகங்களை சேலைத் தலைப்பினால் மூடி நித்திரையாக்கினோம். அதற்குஇசைய மறுத்து அழுகையை நிற்பாட்டாத குழந்தைகள் சிலரின் வாய்களைப் பொத்தி வைத்திருக்க வேண்டிய நிலைகூட ஏற்பட்டது.''

இந்த இடத்தில் அந்தத்தாய் நிறுத்திக்கொள்ள அதே இடத்தைச் சேர்ந்த ந. விமலா என்ற இளம் பெண்ஒருவர் தொடர்கிறார்:-

'இப்படிப் பயங்கரமாகக் கழிந்த அந்த இரவு முற்றுப் பெற்று நேரம் செல்லச் செல்ல குழந்தைகள் பசியால் துடித்தனர். கைக் குழந்தைகள் துவண்டனர். "பால்மா'' கரைத்துக் கொடுப்பவர்கள் அவற்றைக் கையோடு கொண்டு வராததால் அக்குழந்தைகள் பசிமயக்கத்தில் வாடிச் சுருண்டனர். இந்தக் குழந்தைகளுக்கு வெறும் நீராவது கொடுக்கலாம் என்றால் பக்கத்தில் நீர்நிலைகள் ஒன்றும் காணப்படவில்லை. ஆகையால் நானும் என்னை ஒத்த வயதுடைய வேறு பெண்களும் 10—13 வயதுள்ள ஆண்பிள்ளைகளுமாக நீர்நிலைகள் தேடிச்சென்றோம். சிறிது தூரத்தில் இருந்த ஆற்றில் நீர் இருந்தும் கொண்டு செல்வதற்குப் பாத்திரம் இல்லாது தவித்தோம். ஈற்றில் ஆண்பிள்ளைகளின் சாரம் சேட் என்பவற்றை நீரில் தோய்து எடுத்துக் கொண்டு குழந்தைகள் இருந்த இடத்தை அடைந்து அவர்களின் வாய்களைதிறந்து வைத்து அதில் ஆற்றில் நனைத்த ஆடைகளைப்பிழிந்து துளிதுளியாக வந்த நீரை விட்டோம், அத்துடன் அந்த ஈரலிப்பான சேலைத்துண்டுகளை அவர்கள் உடம்பில் ஒற்றி எடுத்தோம். அதனால் அவர்கள் களைப்பு நீங்கியது எனினும் பசி நீங்கவில்லை. சற்றுவயது வந்த பிள்ளைகளுக்கு காட்டில் கிடைக்கும் 'துவரங்காய்' 'பனிச்சங்காய்' போன்ற காய்வகைகளையும், இலைகுழைகளையும் பிடுங்கிக் கொடுத்தோம். என் வாழ்வில் இன்னுமொருமுறை இப்படியான ஒரு பயங்கரமும் ஏற்படக்கூடாது என்று இறைவனை வேண்டுகிறேன்'' என்றார்.

●

இப்படிப் பெண்கள் வனவாசம் செய்தபோது நாட்டில் நடந்த அட்டூழியங்கள் அளப்பரியன இவற்றைச் செய்வதில் படைகளில் இருந்த சிக்களவர்கள் பெரும் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பட்டர்களாம் படைகளின் அடிகளுக்கு ஆளான திரு. வை நடராஜா என்பவர் கூறுகின்றார்:-

"பெண்கள் காட்டை நோக்கிச் சென்றதும் வீட்டில் இருந்தஆண்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகினார்கள் வீட்டில் இருந்த ஆண்கள் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். இளைஞர்கள் எல்லோரும் அடித்துக் கிடத்தப்பட்டார்கள். அடியின் வேதனை தாங்க மாட்டாமல் சரிந்த அந்த இளைஞர்களை படையினர் வரிசையாக வீதியில் கிடத்தினர் பின்னர் அப்படிக் கிடந்த அவர்களின்முதுகுகளின் வழி மேல் அணிவகுப்பு நடைபெற்றதாம்'' என்கிறார்.

இவருடன் நான் கதைத்த போது இவர் சிறிது குனிந்த நிலையிலே எங்களுடன் உரையாடினார். காரணம் படையினரால் அடிக்கப்பட்ட போது இவரின் நெஞ்சுப் பகுதியில் இரு எலும்புகள் முறிவடைந்திருந்தமையே வெளிப்படையாகத் தெரியும் அந்த உள் காயங்களின் வேதனையால் அவர் சிரமப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

●

சிங்கள வெறியர்களால் உடைக்கப்பட்டு எரிக்கப்பட்ட அழிக்கப்பட்ட ஆறு தமிழ்கடைகளில் ஒன்றான முதலிக் குளம் சந்தி "சிவம் ஸ்ரோஸ்'' உரிமையாளர் திரு. பொ. இராசதுரை கூறுவதாவது:-

"என்னுடைய கடையும் க. வைரமுத்து என்பவருடைய கடையும் சிங்கள வெறியர்களினால் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன. அப்போது நல்லகுட்டியாறு எனுமிடத்தில் ஒரு தாயும் மகனும் ஒன்றாகவே சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதையும் கேள்விப்பட்டேன். இது பொய் வதந்தி என நான் எண்ணியிருந்தபோதும் பின்னர் உண்மைச் சம்பவம் என்பதை அறிந்து கொண்டேன்.'

இவர்களிடம் இருந்து விடைபெற்று வீடு திரும்பும் வழியில் "வான் ஆறு'' என்று சொல்லப்படுகின்றகுடியேற்றத் திட்டம் ஒன்றில் (கந்தளாய்க்கு அண்மையில்) வைத்து சிங்கள வெறியர்களின் வாள் வெட்டுக்கு இலக்கான (13) பதின்மூன்று வயதுடைய ச. விஜயகுமார் எனும் சிறுவனைச் சந்தித்தேன். அந்த பசுந்தளிர் கூறுவதைக் கேளுங்கள்.

'நானும் இன்னும் சிலரும் நெல் அறுவடைக்கென கந்தளாய்ப்பகுதிக்குச் சென்றிருந்தோம். அப்போது வான் ஆற்றில் வைத்து எங்களைச் சிங்களவர்கள் துரத்தினார்கள். நாங்கள் எல்லோரும் சென்ற வழியாலே திரும்பி ஓடினோம் அப்போது ஓரிடத்தில நான் கால் தடுக்கி விழுந்து விட்டேன் உடனே என் கழுத்தில் கத்தி ஒன்று வெட்டியது அதைத் தொடர்ந்துபின்னால்வெட்டு விழுந்தது. அத்துடன் ஒரு வெறியன் "டே தமிழா நீ நீ சாகடா எனக்கூறி என் தலையை ஏறி மிதித்தான். பின் அவர்கள் கலைந்து சென்றதும் நான் எழுந்து ஓடி வந்து என்னுடன் வந்தவர்களுடன் சேர்ந்து கொண்டேன்.

கந்தளாயைச் சேர்ந்த அமரசிங்கம் என்பவர் கூறுகின்றார்:-

எங்கள் வீட்டுக்கண்மையில் ஒரு வீட்டில் தகப்பன் மைத்துணன் ஆகியோருடன் ஒரு ஐந்து வயதுப் பிள்ளையும் கொலை செய்யப்பட்டார்கள்: அந்தக் குழந்தையின்முதுகினிலே ஒரு குத்துக் கத்தி இருந்ததாகவும் கூறுகிறார்கள்'' என்கிறார்.

அதே சமயம் தம்பலகாமத்தில் மூர்த்தி என அழைக்கப்படும் திருஞான சம்பந்த மூர்த்தி என்ற இளைஞன் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தகவல்: "அங்கஜன்',



# தமிழ் அகதிகள் கூறும் கண்ணீர்க் கதைகள்!

## அதிகாரம் ஆட்...

—7-ம் பக்கத் தொடர்

முந்திய அரசாங்கத்துக்கெதிராகக் சாட்டிய குற்றச் சாட்டுகளுள் ஒன்று.

திரு. லலித் அத்துலத்முதலி:- கௌரவ எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்க விரும்புகிறேன். சில்லறை வியாபார முறைகளைப் பாவனையாளர் தெரிந்தெடுக்கும் விருப்புக்குச்சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்பதைஅவர் ஏற்றுக் கொள்ளுகின்றாரா?

திரு. அ. அ.:- நுகர்வாளர்களுக்கு அத்தகைய தெரிவுரிமை இருக்கவேண்டும். என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் அதே நேரத்தில் சமதர்ம கோட்பாட்டைப் படித்து அதில் நம்பிக்கை கொண்டுள்ளவன் என்றவகையில் உற்பத்திச் சாதனங்களும் வினியோக சாதனங்களும் இறுதியில் (தனியார் சம்மந்தப்படாத) பொதுத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றே நான் நம்புகிறேன். இது எனது கருத்து. இதை எடுத்துரைக்கும் சுதந்திரமும் எனக்குண்டு. [இடைக்குழப்பம்] கள்வர்கள் இருக்கின்றார்கள். நல்லவர்களும் இருக்கின்றார்கள். எல்லோருக்கும் ஒரே நாமம் சாத்தாதிருப்போமாக. கள்வர்களை வேட்டையாடிக் கண்டிப்போம். நல்ல மனிதர்கள் தொடர்ந்து மேலே செல்ல அனுமதிப்போம். நல்ல கூட்டுறவு இயக்கங்கள் தொடர்ந்து வளர அனுமதிப்போம்.

திரு. லலித் அத்துலத்முதலி:- நல்ல கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து முன்னேற அனுமதிப்போம். நாம் அவற்றை அழிக்கப் போவதில்லை.

திரு. அ. அ.:- அவற்றை நீங்கள் அழிக்கப் போகிறீர்களென நான் கூறவில்லை. பத்திரிகை அறிக்கைகள் அடிப்படையில் கவனிக்கும் போது அந்தத்திசை நோக்கிய போக்கொன்று தெரிகின்றதென்பதே நான் கூறுவதாகும். இந்தக் கொள்கை விளக்கக் கூற்றில் நீங்கள் என்னத்தைச் செய்யப்போகின்றீர்கள் என்பதைத் திட்ட வட்டமாகக் கூறவில்லை. இதுதான் எனது கண்டனமாக இருந்திருக்கின்றது. ஆரம்பத்திலும் இதைநான் தெரிவித்திருக்கிறேன்.

—வளரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசிய அரசுப் பேரவையில் அமிர்தலிங்கம் (1)

# அதிகாரம், ஆட்சிக் கதிரை என்றென்றைக்கும் உங்களுக்கே சாசுவதம் என்றெண்ணுதீர்!

1977 ஆகஸ்ட் 23ம் நாள்; நாடெங்கும் சிங்கள இனவெறியர்கள் தமிழர்களை படுகொலை செய்தும், கொள்ளையடித்தும் கொடூரம் விளைவித்துக்கொண்டிருக்கும் பயங்கர நேரம்; இனவெறி கோரமாகத் தாண்டவமாடிய உச்சக்கட்டம்; இனக்கலவரத்துக்கான முழுப்பழியையும் பொதுவாக தமிழர் விடுதலைக் கூட்டணி மீதும் — குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மீதும் — அரசாங்கமும் சந்தர்ப்பவாதிகளும் சிங்கள அரசியல்வாதிகளும் சுமத்திவந்த நேரம்; 'அமிர்தலிங்கம்தான் இதற்கு எல்லாம் காரணம்' என்ற கருத்தை மக்கள் மனதில் பதிப்பதற்கு தமிழ் சமுதாய விரோதிகள் படாதபாடு பட்டுவந்த சமயம், 'அமிர்தலிங்கம்; என்ற பெயர் ஒவ்வொரு சிங்களவன் வாயிலும் வெறுப்புடன் உச்சரிக்கப்பட்டுவந்த நேரம்; தேசிய அரசுப்பேரவையில் தமிழ்ஈழத் திருத்தப் பிரேரணை விவாதத்தின் முடிவில் இறுதியாக உரை நிகழ்த்துவதற்காக திரு. அமிர்தலிங்கம் எழுந்து நிற்கிறார்; பார்வையாளர் 'கலரி' நிரம்பி வழிந்து காணப்படுகிறது; தேசிய அரசுப் பேரவை கட்டடம் முட்டிவழிகிறது; எல்லோரது கண்களும் ஐந்தரை அடி உயரமுள்ள அந்த மனிதர் மீதே பதிந்து நிற்கின்றன; என்ன பேசப்போகிறார் என்கிற ஆர்வம் அனைவர் முகத்திலும் காணப்படுகிறது.

தலைவர் அமிர்தலிங்கம் தமக்கேயுரிய கம்பீரத் தொனியுடன் பேச்சைத் தொடங்குகிறார். தமிழில் தொடங்கிவிட்டு, ஆங்கிலத்தில் தொடர்கிறார். தலைவர் அமிர்தலிங்கம்பேசத் தொடங்கியதும் நான்கு புறமிருந்தும், அரசாங்கப் பின்வரிசை உறுப்பினர்களிடமிருந்து கேலியும் கிண்டலும், குறுக்கீடுகளும் கேட்கின்றன. என்ன ஆச்சரியம்? எல்லாம் ஒரு சில மணித்துளிகளுக்குத்தான்? தனக்கேயுரிய ஆளுமை நிறைந்த தொனியாலும் சொல்லாட்சியாலும் அனைவரையும் அடக்கிய தலைவர் அமிர்தலிங்கம், அங்கு நீண்ட உரையொன்றை நிகழ்த்தினார்.

அந்த உரையை இவ்வாரத்திலிருந்து பகுதிபகுதியாக வெளியிடுகிறோம். —ஆர்.



கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே அரசாங்கத்தின் கொள்கை விளக்கக் கூற்றின் மீதான விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் முடித்து வைக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்திருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் நான் கூறப்போகும் ஒவ்வொரு வார்த்தையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் காரணத்தினாலும், நான் கூறுகின்றவற்றை திரித்துக் கூறச் சந்தர்ப்பம் அளிக்க நான் விரும்பாததாலும், நான் எனது உரை முழுவதையும் தமிழ் மொழியில் நடந்த எண்ணியிருந்த போதிலும், அதனை ஆங்கிலத்தில் நிகழ்த்த விரும்புகிறேன்.

சபாநாயகர் அவர்களே! ஆரம்பத்தில் நான் ஐ. தே. கட்சியும், கௌரவ பிரதமரும் தேர்தலிற் பெற்ற மகத்தான இமாலய வெற்றி குறித்து எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஜுலை 22ம் திகதி அதிகாலை வேளையில் தேர்தல் முடிவுகள் வானொலியில் கேடகத் தொடங்கியதும் இந் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள் பரவலாக ஐ. தே. கட்சி வெற்றி பெற்று வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஆனால் பலமிக்க எதிரணி ஒன்று, அரசாங்கத்துக்குச் சவால் விடக்கூடிய எதிரணி ஒன்று ஜனநாயகத்தைத் தழைத்தோங்க வைப்பதற்கு அவசியமாய் இருக்கும் பொழுது, எதிரணி முற்றிலுமே அனேகமாக சிதைக்கப்பட்டு ஐ. தே. கட்சி, இத்தகைய இமாலய வெற்றி பெற்றதை அன்று மாலை கண்ட மக்கள் பீதி அடைந்தார்கள்.

இந்த நாட்டின் அரசியற் சிந்தனையை ஏறத்தாழ முப்பது நாற்பது ஆண்டுகளாக உருவாக்கிவந்து இளைஞர்களின் சிந்தனையை ஆற்றுப்படுத்திய பல பழக்கமான முகங்களை துரதிர்ஷ்டவசமாக நாம் இந்தச் சபையிற் காணமுடியாதிருக்கின்றோம்— அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் இதுபற்றி மிக மகிழ்ச்சி காணலாம். ஆனால் தென்னிலங்கையிலுள்ள இவ்விரு பிரிவினர்களுக்கிடையேயான அதிகாரப் போட்டியிலிருந்து ஒரு வழியில் புறத்தே நிற்கும் தமிழர்விடுதலை கூட்டணியினரான நாம், அவர்கள் இங்கில்லாதிருப்பதைப் பெரிதும் உணர்கின்றோம். அவர்கள் தவறுகள் இழைத்திருக்கலாம்.

அங்கத்தவர் ஒருவர்:— "அவர்கள் நிராகரிக்கப் பட்டு விட்டார்கள்"

திரு. அ. அ:- ஆமாம் நிராகரிக்கப்பட்டுவிட்டார்கள். மக்களின் முடிவுபற்றி நான் தீர்ப்புக் கூறவில்லை. அவர்கள் இங்கில்லாதிருப்பதை எம்முள் குறிப்பிடக் கூடிய தொகையினர் உணர்கின்றோம் என்பதை மாத்திரமே நான் குறிப்பிடுகின்றேன்.

அங்கத்தவர் ஒருவர்:— அவர்கள் பஸ் வண்டியைத் தவற விட்டுவிட்டார்கள்.

திரு. அ. அ:- 1956 ஐ. தே. கட்சியின் படுதோல்விக்குப் பின்னர் நிகழ்ந்தது போல் அவர்கள் பஸ்வண்டியைத் தவற விட்டுவிட்டவர்களாக இருக்கலாம். வேறுசிலர் தெரிவுபெற்று வந்திருக்கிறார்கள். ஊசலி ஒரு கோடியை அடைந்து நிற்கின்றது அரசாங்க அணியிலுள்ள எனது கௌரவ நண்பர்கள் போதிய அளவு கவனமற்றிருப்பாராயின் ஊசலி இதே வேகத்தில் மறு கோடியைப் போய் அடைந்தும் விடலாம்.

ஊசலியின் இத்தகைய வீச்சு இச்சபையில் உள்ள எமக்கு பரிச்சயமான ஒன்று சுதந்திரத்தை அடுத்து 1952ல நிகழ்ந்தமுதல் தேர்தலில் டட்லி சேனநாயகாவின் தலைமையில் ஐ. தே. கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. ஆண்டொன்று முடியுமுன்னர் நாட்டிலே ஹர்த்தால் ஒன்று நிகழ்ந்து டட்லி சேனநாயகா அவர்கள் பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று சேர். ஜோன் கொத்தலாவல பிரதமரானார். உச்சத்திலிருந்த ஐ. தே. கட்சி 1956ல் கீழே உருண்டு வந்து எட்டு உறுப்பினராக கரைந்து நின்றது. இவ் எண்மரில் ஒருவரோ இருவரோ எனநினைக்கின்றேன் கட்சியை விட்டுப் பிரிந்தார்கள். 1956ல் நாமும் இந்தச் சபையில் இருந்தோம்.

1960 மார்ச் மாதம் ஆகப் பெரிய கட்சியாக ஐ. தே. கட்சி தெரிவு செய்யப்பட்டது. ஆனால் 1960 ஜுலை மாதத்தில் ஆட்சிப்பொறுப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைக்கு மாறிற்று. 1965ல் ஆகப் பெரிய கட்சியாக ஐ. தே. கட்சி மீண்டும் வெற்றி பெற்று எங்கள் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைத்தது 1970ல் அவர்கள் மீண்டும் தோற்கடிக்கப் பட்டனர் கௌரவ அத்தனகல உறுப்பினரின் தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. இன்று 1977ல் ஐக்கிய தேசியக் கட்சி பெரு வெற்றி பெற்று அதிகார பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. ஏனையோர் செய்த தவறுகளை இவர்களும் செய்து அதே விதிக்கு ஆளாகமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இவ்வளவையுந்தான் நான் கூறுகின்றேன். அரசியல் செல்வாக்கின் மேடு பள்ளங்கள் பற்றி பரிச்சயம் குறைந்த இன்றைய புது உறுப்பினர்கள் நிரந்தரமாக தாமே என்றென்றும் அதிகார பீடத்தில் இருக்கக் கூடும் என்று நம்பக் கூடிய இவர்கள் இந்தப் படிப்பினையை மனத்தில் பதித்துக் கொள்வார்கள் என்பது பற்றி நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

சபாநாயகர் அவர்களே! நான் எனது பேச்சை ஆரம்பத்தில் இருபகுதிகளாகப் பிரித்துக் கொள்ள நினைத்தேன். [இடைமறித்தல்] கௌரவ உறுப்பினர்கள் பேச்சாளர்களை குழப்பும் இந்தக் கூடாத பழக்கத்துக்கு ஆளாகின்றார்கள். ஆரம்பத்தில் அவர்களின் தலைவர்கள் இவர்களை சீராக ஒழுகும்படி எச்சரித்திருப்பார்கள்என்றே நினைக்கின்றேன் பிரதமரின் ஆலோசனையைப் பின்பற்றிச் சீராகஒழுகுவார்கள் என்றும் என்னுடைய நேரத்தை வீணடிக்கமாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன். இத்தகைய இடைமறிப்புகளினால் கலவரமடையக் கூடிய அளவிற்கு நான் பாராளுமன்ற அனுபவமற்ற ஒருவன் அல்ல.

சபாநாயகர் அவர்கள்!— கௌரவ எதிர்க்கட்சித் தலை

## தேசிய அரசுப்பேரவையில்ஐ.தே.கட்சியினருக்கு எதிர்க்கட்சி முதல்வர் இடித்துரை!

வர் 'பிரித்துக் கொள்ளுதல்' என்ற வார்த்தையைப் பாவித்த பொழுது அவர்கள் இயல்பாகவே இடைமறிக்க வேண்டியதாயிற்று.

திரு. அ. அ:- நான் அதை அறிவேன் "பிரித்துக்கொள்ளுதல்" என்ற வார்த்தை எனது உதடுகளிலிருந்து பிறக்கும்பொழுது அதற்கு ஒரு விசேட குறிப்பு இருப்பதாகத் தெரிகிறது. கொள்கைவிளக்கக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்ட பொதுவான கொள்கை தொட்டு சிறிதுநேரம் பேசலாமென நினைத்திருந்தேன். ஆனால் [illegible] நிலைமை காரணமாகவும் எதிரேயுள்ள அமைச்சர்கள் உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளின் தன்மை காரணமாகவும் கொள்கை கூற்று தொடர்பாக இரண்டொரு குறிப்பு மாத்திரம் கூற விரும்புகிறேன்.

கொள்கைக் கூற்றினை மிகக் கவனமாக வாசித்தேன். இக் கூற்று ஐ. தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மீண்டும் கூறுவது போலவும் பெரும்பாலான பகுதிகளில் சொல்லுக்குச் சொல்லு கூறுவது போலவும் மாத்திரமே எனக்குத் தோன்றுகின்றது. தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றில் கூறப்படும் பொதுப்படையான கூற்றுக்களிலும் பார்க்க காத்திரமும் திட்டவட்டமுமான ஒன்றைக் கொண்டிருக்க வேண்டியதே ஒரு அரசாங்கக் கொள்கை விளக்கக் கூற்றாக அமைதல் வேண்டும். ஒவ்வொரு தனித் தனித் துறையிலும் அரசாங்கம் குறிப்பாக இன்னதைச் செய்யும் என்று கொள்கைக் கூற்று நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நீண்ட நோக்குக் கொள்கையைப் பொறுத்து நோக்குமிடத்து திட்டவட்டமான எதுவும் இதில் இல்லை என்பதே எனது உணர்வாக அமைகின்றது. நாட்டைப் பீடித்த நோய்களை உண்மையாக மாற்றக் கூடிய ஒரு கொள்கைக் கூற்றாக இது அமையாது முதலுதவிக் கொள்கைக் கூற்றொன்றாகவே இது அமைந்துள்ளதென்று கூறலாம். இது இந்தக் கூற்றின் அடிப்படைக் குறைபாடு ஒன்று என்றுதான் கூறுவேன்.

இந் நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளனைத்தும் தாம் சமதர்ம கட்சிகளென்று உரிமைகோரிக் கொள்ளுகின்றன. [இடையீடு, குழப்பம்] ஆமாம் நாம் நிச்சயமாகவே (சமதர்மவாதிகள்தாம்). உண்மையிலே கௌரவ வர்த்தக அமைச்சர் கூறியது போல சமதர்மத்தில் பல்வேறு வகைகள் உண்டு. இவையனைத்துள்ளும் உலகனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவகைச் சமதர்மம் உண்டென்று நான் நினைக்கின்றேன். அதுதான் விஞ்ஞான அடிப்படையிலான சமதர்மம். இவ்வாறான கொள்கை ஒன்றைப் பின்பற்றும் விருப்பெதுவும் இக்கொள்கை விளக்கக் கூற்றில் இல்லை. இதுபற்றி நான் விரித்து உரைப்பதைத் தவிர்க்கின்றேன்.

உண்மையிலே சமீபத்திய சில நடவடிக்கைகள் கண்டு நான் அவலப்படுகின்றேன். கியூ வரிசைகள் ஒழிக்கப்பட வேண்டும்; கியூ வரிசைகளில் நிற்காது மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்க வகை செய்யவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதற்குப் பரிகாரமாக எமக்குப் பரிச்சயம் மிக்க உள்ள அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் ஏனையோருக்கும் புத்துயிர் ஊட்டப் போகின்றோம். [இடைக் குழப்பம்]. கூட்டுறவு இயக்கத்தில் குறைபாடு இல்லை என்று நான் கூறவில்லை. உண்மையான கூட்டுறவு இயக்கத்தைச் செம்மையாக அழித்தார்கள் என்பது நாம்

— 6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது



# யாழ் மாநகரசபையின் களவுகள் மேலும் அம்பலமாகலாம்!

அண்மையில் யாழ்ப்பாண மாநகரசபையில் ரூபா 4000/- பெறுமதிவாய்ந்த றேடியோக்கள் உட்பட உதிரிப்பாகங்களில் நிகழ்ந்த களவு அம்பலமானதைத் தொடர்ந்து ஏற்கனவே அங்கு நிகழ்ந்துள்ள பழைய களவுகள் பற்றிய துப்பும் துலக்கப்படலாம்.

1971ல் சுதந்திரக் கட்சி மாஜி மேயர் ஒருவரது பிறந்த தின விழாவையடுத்து யாழ்ப்பாண மாநகர சபையில் 500 தோட்டாக்கள், 11 லொறி டயர்கள் மற்றும் பால்மாத் தகரங்கள் பெருமளவில் களவு போனது தெரிந்ததே! தோட்டாக்கள் களவு பற்றி பொலீசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அப்போது ஒரு மாநகரசபை ஊழியர் கைது செய்யப்பட்டார். ஆயினும் பின் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து பிரச்சினை அமுக்கப்பட்டது.

களவு செய்தவர்களைக் காப்பாற்றுவதற்காக களவைத் துப்புத் துலக்குவதில் சிரத்தையெடுக்காது களவு போன பொருட்களுக்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தரிடமே சம்பந்தப்பட்ட பொருட்களுக்கான பெறுமதி அறவிடப்படுவதே சுதந்திரக் கட்சி மாஜி மேயரது நடைமுறை. களவு போன தோட்டாக்கள் விஷயம் போர்த்து மூடப்பட்டதும் அப்படியே! பால்மா விடயத்தில் அதற்குப் பொறுப்பாக இருந்த களஞ்சியக் காப்பாளர் மீதே வழக்குத் தொடரப்பட்டது நீதிமன்றம் அவரை விடுதலை செய்த போதிலும் அவர் மீதான திணைக்கள விசாரணை இன்னும் முற்றுப்பெறவில்லை. சம்பந்தப்பட்ட பொறுப்பு உத்தியோகத்தர் இன்னமும் தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ளார்.

தற்போதைய லொறி உதிரிப் பாகங்களது திருட்டை பொறுத்த மட்டில் களவைக் கண்டுபிடிப்பதில் தற்போதைய ஆணையாளர் கண்டிப்புடன் நடந்து கொண்டுள்ளார். களவு பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதுடன், காவலர் சிலரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபரான மெக்கானிக் தலைமறைவாகியுள்ளாரென அறியப்படுகிறது.

யாழ் மாநகரசபையில் முன்னர் நிகழ்ந்துள்ள களவுகள் பற்றிய விவரங்கள் மாநகரசபைகளது ஊழல்களை விசாரணை செய்து வரும் கமிஷனுக்கு யாழ். மாநகர வரியிறுப்பாளர் சங்கத்தால் அறிவிக்கப்படுமா?

## தமிழ் ஈழம்...

—1-ம்பக்கத் தொடர்

அரசமைப்பு சட்டத் திருத்த மசோதா சம்பந்தமாக பல பிரச்சினைகள் பற்றி தெரிவுக்குழு நிலையில் ஆராயப்படும் என்று பிரதமர் தெரிவித்தார். அந்தத் தெரிவுக்குழுவின் கடமைகள் என்ன? நிபந்தனைகள் எவை என்பது தெளிவாக அறிவிக்கப்பட்டபின்னரே கூட்டணி தனது நிலையை அங்கு எடுத்துக் கூறும்!

நாம் ஒரு விடுதலை இயக்கத்தை சேர்ந்தவர்கள்; தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக உழைப்பதற்காக இங்கு அனுப்பப்பட்டிருக்கிறோம். தந்தை செல்வா அவர்கள் தந்துவிட்டுச் சென்ற அரசியல் தத்துவமான "தமிழ் ஈழம்" என்ற இலட்சியத்தை —முன் வைத்தே கடந்த பொதுத் தேர்தலில் நாம் தமிழ் மக்களின் கட்டளையை பெற்றிருக்கிறோம். தமிழ் ஈழத்துக்கான அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் அதை செயற்படுத்துவதற்குமே தமிழ் மக்கள் எமக்கு உத்தரவு தந்திருக்கிறார்கள்.

எங்கள் மக்களுக்கு — தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமையே எங்கள் பொறுப்பு— அதாவது அவர்களது இழந்த அரசுரிமையை பெற்றுக் கொடுப்பதே எங்கள் கடமையும் பொறுப்புமாகும். ஆண்டவனின் உதவியோடு அந்தப் புனிதமான கடமையிலிருந்து நாம் தவறுமல் இருப்போம்!"

(திரு. அமிர்தலிங்கத்தின் முழுமையான அறிக்கை விபரம். பின்னர் இடம் பெறும்.

---


**கிங்ஸ்லி** (கொழும்பு)
10-வது வெற்றி' வாரம்!
சிவஜி கணேசன், தேவிகா, கமலஹாசன், ஜெயசித்திரா, மஞ்சுளா— நடித்த
**சத்யம்** (ஈஸ்ட்மன் கலர்)

**பிளாசா**
ஜெமினி, கே. ஆர், விஜயா நடித்த-
**தசாவதாரம்**

4 வது வாரம்
**கெப்பிட்டல்** (கொழும்பு)
ஜெய்சங்கர், முத்துராமன், பத்மினி நாகேஷ்
—நடித்த—
தேவரின்
**பெண் தெய்வம்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
ஜெய்சங்கர்
— நடித்த —
**துணிவே துணை**
(கலர்)

14-ம் திகதி முதல்
**லிடோ** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். லதா
— நடித்த —
**நீதிக்கு தலை வணங்கு**
(ஈஸ்ட்மன் கலர்)

10-வது ஜனத்திரள்
வாரமாகக் காட்சியளிக்கிறது!
**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)
தினசரி பி. ப. 2-15, மாலை 6, இரவு 9.30
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., லதா, பவானி
தங்கவேலு, நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் நடித்த
**உழைக்கும் கரங்கள்** (ஈஸ்ட்மன் கலர்)

7-ம் திகதி முதல்
**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]
ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி,
கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா, ஸ்ரீபிரியா,
எம். ஆர். ராதா, ரவிகுமார், சீர்காழி
கோவிந்தராஜன், எம். ஆர். ஆர். வாசு,
வீ. எஸ் ராகவன் கோபிகிருஷ்ண,
மேஜர் சுந்தரராஜன் நடித்த-
**தசாவதாரம்**
(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை கொழும்பு -12, 194ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் [illegible] பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அசசகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org